மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்



மலர் 6 • இதழ் 12 • ஜூன் 2022 • விலை ரூ.18/-

# வெண்மை

தமிழ் மாத இதழ் VENMAI

## எண்ணங்கள்



# தேடல்

## சிறப்பிதழ்



ஐஸ்வர்யம்
தெய்வீகம்
மங்களம்
இவை மூன்றின்
சங்கமம்
RAMRAJ
பட்டு வேட்டிகள் • சர்ட்டுகள்
Purity & Positivity
SILK MARK INDIA
Your Assurance of Pure Silk
RAMRAJ
lagnaa®
PURE SILK DHOTIS | SHIRTS
RAMRAJ
MUHURTH®
SILK DHOTIS | SHIRTS
www.ramrajcotton.in



மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்
வாழ்வில் அடைய வேண்டிய இலக்குகள்...
அதற்கு நாம் செய்யவேண்டிய தேடல்...
அந்தத் தேடல் எப்படி இருக்க வேண்டும்...
எல்லாம் உணர்த்தும்
தேடல்
சிறப்பிதழ்
என்ற இந்த இனிய நூலை வழங்குவதில்
பெருமிதம் கொள்கிறோம்.

# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

தேடல் இல்லாமல் போயிருந்தால், மனித இனம் மற்ற உயிரினங்களைத் தாண்டி இவ்வளவு தூரம் முன்னேறி இருக்காது. குழந்தையின் கண்கள் புதியனவற்றைத் தேடிக்கொண்டே இருக்கின்றன. கைகளும், கால்களும் தேடலின் நோக்கத்தில் எப்போதும் பரபரத்துக்கொண்டே இருக்கின்றன. குழந்தையின் ஒவ்வொரு முயற்சியும் தேடலின் தொடக்கம் என்றே சொல்லலாம். 'தேடுங்கள் கண்டடைவீர்கள்' என்கிற பைபிள் வாசகம், ஒன்றைக் கண்டடையத் தேடுவதின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

சாதாரணக் குடும்பத்தில் பிறந்து, உழைப்பால் உயரத்தைத் தேடிக் கண்டடைந்த ஒரு தொழிலதிபருக்கு வாரிசு இல்லை. மிகப்பெரிய தொழில் சாம்ராஜ்ஜியத்தைத் தனக்குப் பிறகு யார் நிர்வாகம் செய்யப் போகிறார்கள் என்கிற கேள்விக்குப் பதில் தேட விரும்பினார் அவர். சரியான பதிலைக் கண்டடையாமல் போனால், வாழ்நாள் முழுவதும் எதற்காக உழைத்தாரோ அதற்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும் என்று உணர்ந்தார்.

தலைமைப் பண்பு மிக்க ஊழியர்களை அழைத்தார். அனைவருமே அவரைப் போலச் சாதாரணக் குடும்பப் பின்னணியிலிருந்து உழைப்பால் உயர்ந்து, நிறுவனத்தில் முக்கிய இடத்தைப் பெற்றவர்கள். அவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, பொறுப்பை அவரிடம் ஒப்படைக்க நினைத்தார். எனவே, தலைமைப் பொறுப்புக்கு தகுதியுள்ளவர்களான 30 பேரைத் தன் அறைக்கு அழைத்தார்.

''உங்களில் ஒருவர்தான் அடுத்த வருடம் இந்த மாபெரும் நிறுவனத்தின் பொறுப்பை ஏற்பீர்கள். உங்களில் யார் சிறந்தவர் என்பதைக் கண்டறிய ஒரு போட்டி வைக்கிறேன். உங்கள் கைகளை நீட்டுங்கள்" என்றார். மகிழ்ச்சியை மறைத்துக்கொண்டு மதிப்புக்குரிய முதலாளி சொன்னபடி அனைவரும் கைகளை நீட்டினர். அவர்களிடம் ஆளுக்கொரு விதையை ஒப்படைத்தார். "இந்த விதை வீரியம் மிக்கது. இதை நீங்கள் உங்கள் வீட்டில் ஒரு தொட்டியில் நட்டு, உரம் போட்டுத் தண்ணீர் ஊற்றி நன்றாகப் பராமரித்து வளர்க்க வேண்டும். அடுத்த வருடம் இதே நாளில், உங்களின் விதை எவ்வளவு செழிப்பாக வளர்ந்திருக்கிறது என்று பார்ப்பேன். மாதம்தோறும் விதையின் வளர்ச்சிக்கு நீங்கள் எடுத்த முயற்சி விவரங்களை என்னிடம் எழுத்துப்பூர்வமாக அளிக்க வேண்டும். இந்த விதையின் வளர்ச்சி பற்றி யாரும் யாரிடமும் பேசிக்கொள்ளக்கூடாது. என்னிடமும் இதைப் பற்றிப் பேசக்கூடாது. அப்படிப் பேசினால் வேலையைவிட்டு நீக்கப்படுவீர்கள்" என்று கூறினார்.

அனைவரும் மகிழ்ச்சியோடு விதையை எடுத்துக்கொண்டு சென்றனர். 'ஒரு விதையால் தங்கள் ஒட்டுமொத்த எதிர்காலமும் மாறப்போகிறது' என்று நம்பிக்கையுடன் அதை விதைத்தனர். ஊழியர்களின் குடும்பத்தினரும் விதை நன்றாக வளர வேண்டுமென்பதில் கவனம் செலுத்தினர்.

அவர்களில் ஒரே ஒருவனின் விதை மட்டும், என்ன உரம் போட்டுப் பராமரித்தாலும், எவ்வளவு தண்ணீர் ஊற்றினாலும் வளரவே இல்லை. விதை செழித்து வளர என்னென்ன முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று பல்வேறு நூல்களைப் படித்தும் ஒரு பயனுமில்லை. இவன் மட்டும் அலுவலகத்தில் சோகமாக இருப்பதைப் பார்த்த மற்றவர்கள், இவன் விதை சரியாக முளைக்கவில்லை என்பதைச் சொல்லாமல் புரிந்துகொண்டனர். ஆனால், மற்றவர்களின் விதைகள் மிகச்சிறப்பாக வளர்வதை அவர்களின் மகிழ்ச்சியான நடவடிக்கைகள் மூலம் தெரிந்துகொள்ள முடிந்தது.

ஒவ்வொருவரும் 'நிறுவனத்தின் அடுத்த தலைமைப் பொறுப்புக்கு,தான் வந்துவிடுவோம்' என்று நம்பிக்கையுடன் செயல்படுவது இவனுக்கு மன உளைச்சலை அளித்தது. தான் ராசியற்றவன் என்பதாகத் தன்னையே நொந்துகொண்டான். 'ஒரு விதையை வளர்ப்பதும், ஒரு நிறுவனத்தை வளர்த்தெடுப்பதும் ஒரே விஷயமா? நிர்வாகம் சார்ந்து வேறு ஏதேனும் போட்டி வைத்திருந்தால் நான் நிச்சயம் முதல் நிலையில் இருந்திருப்பேன்' என்று நினைத்துக்கொண்டான். ஆனாலும் முதலாளியைப் பற்றித் தவறாக நினைக்கவில்லை அவன்.

நாட்கள் ஓடின. அவனுடைய எந்த முயற்சிக்கும் பலன் இல்லை. ஆனால், முயற்சியை மட்டும் கைவிடாமல் தொடர்ந்து உரமும் நீரும் வார்த்தான். அதை ஆவணப்படுத்திக்கொண்டே வந்தான். பதினொன்றாம் மாதம் லேசாக அந்த விதை முளைக்கத் தொடங்கியது. ஆனால், 'இந்நேரம் மற்றவர்களின் விதைகள் செடியாகிப் பூக்கத் தொடங்கியிருக்கும். இனி இது முளைத்து என்ன பயன்' என்று அவனுக்கு சலிப்பு ஏற்பட்டது. ஆனாலும், அந்தச் செடியை வளர்ப்பதை நிறுத்தவில்லை.

ஒரு வருடம் முடிந்தது. அனைவரும் தாங்கள் நன்றாகப் பராமரித்து செழித்து வளர்ந்த செடிகளை முதலாளியிடம் காட்டுவதற்காகத் தொட்டியில் எடுத்து வந்தார்கள். ஒரு மாதத்திற்கு முன்புதான் முளைவிட்ட தன் செடியை முதலாளியிடம் காட்ட அவனுக்குக் கூச்சமாக இருந்தது. ஆனாலும் ஒரு வருடம், தான்

விடாமுயற்சியுடன் செயல்பட்டதை விளக்கி, தன்னுடைய முயற்சியின் குறிப்புகளை முதலாளியிடம் ஒப்படைத்தான். மற்ற போட்டியாளர்களுக்கு அவனைப் பார்க்கச் சிரிப்பாக இருந்தது. 'இவனைத் தவிர மற்ற எல்லோரும் செடிகளைச் சிறப்பாக வளர்த்திருக்கிறோம். இவர்களில் ஒருவரை நிறுவனத்தின் அடுத்த தலைவராகத் தேர்ந்தெடுப்பது சவாலான காரியம். எதையும் விரைந்து முடிவெடுக்கும் நம் முதலாளி, இதற்கு மட்டும் சில நாட்கள் எடுத்துக்கொள்வார்' என்று மற்றவர்கள் பேசிக்கொண்டனர்.

ஆனால், விதைகளை வளர்த்த அனைவரையும் தன் அறைக்கு உடனே அழைத்தார் முதலாளி. நீண்ட நேரம் எடுக்காமல் பத்து நிமிடங்களில் கூட்டம் முடிந்தது. '11 மாதங்கள் வரை முளைக்காத விதையைச் சிறிய செடியாக வளர்த்து எடுத்து வந்தவரே நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பை உடனடியாக ஏற்பார்' என்று முதலாளி அறிவித்தார். அடுத்த நாளே பதவியேற்பு நிகழ்வும் உறுதியானது. அதைவிட அனைவருக்கும் அதிர்ச்சி அளித்த விஷயம், மற்ற 29 பேரையும் வேலையைவிட்டு நீக்குவதாக அறிவித்தார்.

'நன்றாகச் செடியை வளர்த்த எங்களை ஏன் தண்டிக்கிறீர்கள்?' என்று அவர்கள் கேட்க, முதலாளி தெளிவாகப் பதில் சொன்னார். "எந்தச் சவால் வந்தாலும் எதிர்கொண்டு நிறுவனத்தை வெற்றிப்பாதையில் அழைத்துப் போகிற தலைவரைத்தான் தேடினேன். அதற்காகவே ஒரு வருட காலம் எடுத்துக்கொண்டேன். பல்லாயிரக்கணக்கான ஊழியர்களின் உழைப்பில், வாடிக்கையாளர்களின் நம்பிக்கையில் கம்பீரமாக வளர்ந்து நிற்கும் இந்த நிறுவனத்தை உண்மையும், நேர்மையும் கொண்டு வழிநடத்துகிற ஒருவரைத்தான் இப்போது தேர்வு செய்திருக்கிறேன். எப்படி என்று கேட்கிறீர்களா? நான் 30 பேரிடமும் கொடுத்தது, 11 மாதங்கள் கழித்து வளர்கிற, அதுவும் 11 மாதங்களும் சிறந்த பராமரிப்பு கொடுத்துவந்தால் மட்டுமே வளர்கிற ரக விதைகள். நான் நம்பியவர்களில் ஒருவர் மட்டுமே அந்த விதையை முளைக்க வைக்கத் தேவையான வழிமுறைகளை ஒரு வருடமாகத் தேடித் தேடி செய்திருக்கிறார். மற்றவர்கள் நான் கொடுத்ததைப் போல வீரியமிக்க வேறு விதைகளை வாங்கி வளர்த்திருக்கிறார்கள்.

பதவி வருவதற்கு முன்பே உண்மையையும் நேர்மையையும் கைவிட்டவர்கள், நிறுவனம் நெருக்கடியாக இருக்கும் சமயத்தில் சுயநலமாக நடந்துகொள்வார்கள். இவர் மட்டுமே முயற்சியைக் கைவிடாமல் பல்வேறு சாத்தியங்களை ஆராய்ந்து விதையை முளைக்கச் செய்திருக்கிறார். நேர்மையாகவும், திறமையாகவும் நமது நிறுவனத்தை வழிநடத்துக்கூடிய இத்தகைய ஒருவரைத்தான் தேடினேன்" என்று முதலாளி சொன்னார்.

இந்தக் கதையைப் படித்தபோது, இதில் இருந்த 'தனக்கு அடுத்து யார்' என்கிற கேள்விக்கான தேடல் புதுமையாக இருந்தது. புதிர்களால் ஆனது மனித வாழ்வு. தேடல்தான் அந்தப் புதிர்களை ஒவ்வொன்றாக அவிழ்க்கிறது. தேடல் இல்லாதவர்கள் தேங்கி நின்று போகிறார்கள். தேடல் மிகுந்தவர்கள் புதிய புதிய தரிசனங்களை எப்போதும் கண்டடைகிறார்கள். புதிய புதிய அனுபவங்களைத் தேடுவோம். புதிய புதிய தரிசனங்களைக் கண்டடைவோம்.

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

**கே.ஆர்.நாகராஜன்**
நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்



# எதை நீங்கள் தேடுகிறீர்கள்?



நோஞ்சானாக இருந்த ஒரு குட்டி நாயை ஓநாய் ஒன்று கொல்ல வந்தது. அது உயிர் பிழைப்பதற்காக ஓடி, காட்டுக்குள் தியானத்தில் இருந்த முனிவரைச் சரணடைந்தது. முனிவர் தன் சக்தியால் அதை ஓநாயாக மாற்றிவிட்டார். பலசாலி ஓநாயாக மாறிய அது, தன்னைக் கொல்ல வந்த ஓநாயை விரட்டிவிட்டது. பிறகு பவ்யமாக துறவி அருகே அமர்ந்தது.


கொஞ்ச நேரத்தில் ஒரு யானை அந்த வழியாக வந்தது. ஓநாயாக மாறியிருந்த நாயைக் கண்டதும் மிதிக்க வந்தது. உடனே முனிவர் அதை ஒரு யானையாக மாற்றினார். இதைப் பார்த்ததும் குழம்பிய யானை, வந்த வழியே திரும்பிப் போனது. அதன்பின் ஒரு சிறுத்தை வந்தது. அது யானை மீது பாய, அது மீண்டும் முனிவரைச் சரணடைந்தது. உடனே அவர் தீர்த்தம் தெளித்து அதை சிறுத்தையாக மாற்றிவிட்டார். சிறுத்தையைப் பார்த்த சிறுத்தை 'இது நமது இனமாயிற்றே' என விட்டுச் சென்றுவிட்டது. சிறுத்தையைக் கொல்ல ஒரு புலி வந்தது. உடனே முனிவர் அதைப் புலியாக்கிவிட்டார். புலியைக் கொல்ல சிங்கம் வந்தது. உடனே புலியைச் சிங்கமாக்கிவிட்டார் முனிவர்.

சிங்க நிலைக்கு உயர்ந்த அந்த நோஞ்சான் நாய்க்கு அப்போது ஒரு விபரீத எண்ணம் ஏற்பட்டது. "இனி நாம் சிங்கமாகவே இருக்க வேண்டும். ஒருவேளை இந்த முனிவர் நம்மை மீண்டும் நாயாக்கிவிட்டால், நாம் படாதபாடு படவேண்டியிருக்கும். எனவே, இவரைக் கொன்றுவிட்டால் நாம் சிங்கமாகவே இருக்கலாம்" என்று எண்ணி அவர் மீது பாயத் தயாரானது. இதை உணர்ந்துகொண்ட முனிவர் அதன்மீது தீர்த்தம் தெளித்து, "போ நாயே" என்று விரட்ட, அது மீண்டும் நாயாக மாறி அழுதுகொண்டே சென்றது.

நாயின் தேடல் குறுக்குவழியாக இருந்ததால், அது தொடங்கிய இடத்துக்கே மீண்டும் வந்துவிட்டது. 'வாழ்வில் எதை நாம் தேடுகிறோம்' என்ற கேள்விக்கு விடை தெரிந்திருக்க வேண்டும். தொடர்ச்சியான தேடலே நம் வாழ்க்கை. சிறுவயது முதல் உலகத்தில் வாழ்க்கை பற்றிய தேடல் தொடங்கிப் படிப்பு, வேலை, பணம், திருமணம், வீடு, குழந்தைகள், அவர்களின் தேவைகள் என நீண்டு, ஓய்வுபெறும் வயதில் 'இப்போது நாம் என்ன தேடப் போகிறோம்' என்று விரக்தியாக நினைக்கத் தோன்றுகிறது.

ஒவ்வொரு தருணத்திலும் நம் தேடல் மாறிக்கொண்டே இருக்கிறது. பொருட்களையும் வசதிகளையும் தேடும்போது அவை நமக்கு நிறைவுதருவதில்லை.ஒன்று கிடைத்ததும், 'அதைவிடப் பெரிதாக இன்னொன்று வேண்டும்' என்று நம் மனம் நினைக்கத் தொடங்கிவிடும். அந்த நினைப்பு வந்ததுமே, மனநிறைவு இல்லாமல் போய்விடும்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு குகைகளில் வாழ்ந்த நம் முன்னோர்கள்



இப்படிப்பட்ட எதையும் தேடவில்லை. நாகரிகம் அடையாத அந்த மனிதர்கள் தேடியது நிம்மதியை மட்டும்தான்! 'எந்த நேரத்தில் எந்த விலங்கு நம்மை அடித்துக் கொன்றுவிடுமோ' என்ற அச்சத்தில் குகைகளிலும் மரங்களிலும் பதுங்கி வாழ்ந்த அவர்கள், இந்த பயத்தைத் துறக்கும் நிம்மதியான வாழ்வை விரும்பினார்கள். கற்களால் ஆயுதங்கள் செய்தார்கள், பிறகு உலோகங்களைப் பயன்படுத்தினார்கள், விலங்குகளை தங்களுக்கு வேலை செய்யப் பழக்கினார்கள், காட்டைத் திருத்தி நிலமாக்கினார்கள், விவசாயம் பழகினார்கள், வீடுகளை உருவாக்கினார்கள், படிப்படியாக நாகரிகம் அடைந்தார்கள். நிம்மதியான வாழ்வை நோக்கிய தேடலே மனித இனத்தை நாகரிகமாக்கியது.

இப்போது இந்த நிம்மதியைத் தாண்டிப் பல வசதிகளைத் தேடுவதே வாழ்வை மேலும் சிக்கலாக்குகிறது. மகிழ்ச்சி, அமைதி, நிறைவு போன்றவற்றைத் தேடுபவர்கள் அவற்றை அடைந்து நிம்மதியாக வாழ்கிறார்கள். மற்றவர்களுக்கு எப்போதும் நிறைவு கிடைப்பதில்லை.

தேடல்தான் நமக்குப் பல வசதிகளைக் கொண்டுவந்து சேர்த்தது. மாட்டு வண்டியின் வேகம் போதவில்லை என்று நினைத்தபோதுதான் நீராவி எஞ்சின் கண்டுபிடித்தோம். ரயில் வந்தது, பேருந்து வந்தது, கடைசியில் விமானமும் வந்தது. முந்தைய பல தலைமுறையினர் கைகளால் செய்த பல வேலைகளைச் செய்ய இப்போது இயந்திரங்கள் வந்துவிட்டன. அறிவியல் அறிஞர்களின் தேடல்தான் இவற்றை உருவாக்கிக் கொடுத்தது. அவர்களுக்கு இது தேவை. ஆனால், எளிய மனிதர்களுக்கு இப்படிப்பட்ட முடிவற்ற தேடல் தேவையில்லை.

நாம் எதைத் தேடுகிறோம் என்பதே தெரியாமல் இருப்பவர்கள் எதையும் கண்டடைவதில்லை. 'நாம் யார்? நாம் என்ன செய்கிறோம்? இதன் விளைவுகள் என்ன? இப்படிப்பட்ட தேடல் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும்' என்றார் தத்துவ மேதை சாக்ரடீஸ். வாழ்வில் எது நமக்கு சவாலாக இருக்கிறது? எது நம்மைப் பலவீனமானவராக மாற்றுகிறது? எது நம்மை வலிமையாக்குகிறது? இப்படி வாழ்வை சுயபரிசோதனை செய்துகொள்ள வேண்டும். இதைச் செய்வதே



வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றும்.

ஆப்பிள் நிறுவனத்தை உருவாக்கிய ஸ்டீவ் ஜாப்ஸ் இதையே வேறு வார்த்தைகளில் சொல்கிறார். 'கடந்த காலத்தில் நாம் எப்படி இருந்தோம் என்பதை அலசிப் பார்ப்பதன் மூலமே நமக்கான சிறந்த எதிர்காலத்தை நம்மால் உருவாக்க முடியும். வாழ்க்கை என்ற மாயப்புதிருக்கு நாம் விடை தேட வேண்டும். நமது துணிச்சல், முயற்சி, திறமை ஆகியவற்றால் இதைச் செய்துவிட முடியும்' என்கிறார் அவர்.

மனிதர்களுக்கு அடிப்படைத் தேவை உணவு, வசிப்பிடம் மற்றும் உடைகள். வாழ்க்கைப் பாதுகாப்புக்கு ஒரு வேலை அல்லது தொழில் தேவை, நிம்மதியாகக் குடியிருக்க வீடு தேவை. சமூகப் பாதுகாப்புக்காக உறவுகளும் நண்பர்களும் தேவை, அன்பு செலுத்தும் வாழ்க்கைத்துணையும் நேசிக்கும் குடும்பமும் தேவை. மனிதன் ஒரு சமூக விலங்கு. இதெல்லாம் இருப்பதால்தான் அவன் வேட்டை மிருகமாக மாறாமல் இருக்கிறான். இதையெல்லாம் தாண்டிச் சமூக அந்தஸ்து கிடைக்க அவனுக்குச் சில மரியாதைகள் தேவை. தனிப்பட்ட வாழ்வில் நிறைவு பெற அமைதி, அறிவு, அன்பு தேவை. ஒருவரின் தேடலில் இந்த எல்லாம் கிடைத்துவிட்டால், அதுவே நிறைவான வாழ்வு. ●



# துணையின் தேடல்!



மனிதர்கள் ஒவ்வொருவரும் தேடுவது, தங்களுக்கு இணக்கமான ஒரு துணையை! 'இவருடன் இருப்பது பாதுகாப்பு, இவருடன் பேசுவது மகிழ்ச்சி தருகிறது, இவர் பக்கத்தில் இருந்தாலே நமக்கு நிம்மதி கிடைக்கிறது' என்பது போல உணரச் செய்யும் ஒரு துணையை எல்லோருமே எதிர்பார்க்கிறார்கள். வாழ்க்கைத்துணை, நண்பர்கள், நெருக்கமான உறவுகள், குடும்பத்தினர் என்று அவர்கள் யாராக வேண்டுமானாலும் இருக்கலாம்.

எல்லோருமே வெற்றியைத் தேடுகிறார்கள், பணத்தைத் தேடுகிறார்கள். ஆனால், இதுபோன்ற விஷயங்கள் தராத ஒருவித மனநிம்மதியை, இணக்கமான ஒரு துணைவர் கொடுக்கிறார். பெரும் பணம் சேர்த்தவர்கள்கூட, அதை விட்டுவிட்டு நிம்மதியைத் தேடிப் பயணம் செய்வதைப் பார்க்கிறோம். நல்ல துணை கிடைத்திருந்தால் அவர்கள் இப்படிச் செய்திருக்கமாட்டார்கள்.

# அர்த்தம் தேடுகிறார்கள்!



'நான் இந்த வாழ்க்கையை எதற்காக வாழ்கிறேன்? என்ன செய்ய விரும்புகிறேன்' என்று வாழ்வின் அர்த்தம் தேடுகிறார்கள் பலர். வெறுமையான ஒரு வாழ்க்கையில் எந்த சுவாரசியமும் இல்லை. அன்பு செலுத்துவது, பிறரால் நேசிக்கப்படுவது, ஏதோ ஒன்றைச் சாதிக்கத் துடிப்பது, ஒரு விஷயத்தை மாற்ற முற்படுவது என்று ஒவ்வொருவரின் வாழ்வுக்கும் ஒரு காரணம் இருக்கும். அந்தக் காரணத்தைத் தேடி, அதன்படி வாழ்வதே அர்த்தமுள்ள வாழ்க்கை.

தினமும் காலையில் எழுந்ததும் பரபரப்பாகக் கிளம்பி வேலைக்குச் சென்று, ஒரே மாதிரி இருக்கும் வேலையை வாழ்நாள் முழுக்கச் செய்துவிட்டு, எந்தத் தனிப்பட்ட ரசனைகளும் இல்லாமல் சாப்பிட்டு, உடை உடுத்தி, விதியை நொந்தபடி வாழ்ந்து முடிப்பவர்களுக்கு எந்தத் தேடலும் இருப்பதில்லை; அவர்கள் மனநிறைவும் அடைவதில்லை.

# நிலையான வாழ்க்கை!



'வாழ்க்கையில் எப்போ செட்டில் ஆகப் போறே?' இன்றைய இளைஞர்களை இந்தக் கேள்வியைப் போலப் பதற்றம் ஆக்கும் விஷயம் வேறு எதுவும் இல்லை. ஏனெனில், எந்த வயதில் அப்படி ஒரு நிலையான, நிம்மதியான வாழ்க்கை அமையும் என்று பலருக்குத் தெரிவதில்லை.

பல போட்டிகளுக்கு மத்தியில் நல்ல பள்ளியில் சேர்ந்து படித்து, நல்ல மதிப்பெண்கள் வாங்கிச் சிறந்த கல்லூரியில் சேர்ந்து, கேம்பஸ் இன்டர்வியூவில் மிகப்பெரிய நிறுவனத்தில் வேலை கிடைத்து லட்சங்களில் சம்பளம் வாங்கினாலும், செட்டில் ஆகிவிட்ட திருப்தி வருவதில்லை பலருக்கு! ஒரு வேலையில் சேர்ந்தாலும், அதைத் தக்க வைத்துக்கொள்ளத் தொடர்ந்து படித்துக்கொண்டே இருக்க வேண்டும். தினம் தினம் அறிமுகமாகும் அத்தனை மாற்றங்களுக்கும் பழக வேண்டும். அடுத்த தலைமுறைக்கு ஈடுகொடுக்க வேண்டும். 'நம்மைவிடச் சிறந்தவர்கள் அடுத்தடுத்த ஆண்டுகளில் வந்துகொண்டே இருக்கிறார்கள்' என்ற நினைப்பே அவர்களுக்குப் பதற்றம் தருகிறது. இதுதான் பலரை நிம்மதியிழக்கச் செய்கிறது. நிலையான வாழ்க்கையைத் தேடச் சொல்கிறது.

# ஏற்றுக்கொள்வீர்களா?



மனித மனம் அங்கீகாரத்துக்காகப் பெரிதும் ஏங்குகிறது. 'உங்களைப் போல ஒருவராக என்னை ஏற்றுக்கொள்வீர்களா?' என்று தன்னைச் சுற்றியிருக்கும் மனிதர்களிடம் மானசீகமாக ஒவ்வொருவரும் வேண்டுகிறார்கள். அப்படிப்பட்ட அங்கீகாரமே பலரின் தேடலாக எப்போதும் இருக்கிறது. ஒருவரின் வசதி, தோற்றம், சமூக அந்தஸ்து, அவரின் செல்வாக்கு ஆகியவற்றை ஒதுக்கிவைத்துவிட்டு எல்லோரையும் சமமாக மதிக்கும் இயல்பு இங்கு இல்லை.

பள்ளி வயதிலிருந்தே இந்தப் பாகுபாடு வந்துவிடுகிறது. நன்றாகப் படிக்கும் மாணவர்கள் யாரும் கடைசி பெஞ்ச் மாணவர்களுடன் சேர்வதில்லை. கல்லூரியிலோ, நன்றாகப் படிக்கும் மாணவர்களுக்காக என்றே தனி கல்லூரிகள் வந்துவிட்டன. ஒருவர் படித்த கல்லூரியை வைத்தே அவரின் தகுதியை மதிப்பிடுகிறார்கள். அதன்பின் வேலை, திருமண வாழ்க்கை என்று எல்லா இடங்களிலும் இந்த வித்தியாசம் பெரிதாகிக்கொண்டே போகிறது. அந்த வித்தியாசங்களைத் தாண்டி மதிக்கப்படும்போது, இவர்களின் ஏக்கம் தீர்கிறது.

## தேடலைத் தூண்டும் ஆசைகள்!

ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையை வசதியாக்குவதற்கு நிறைய பொருட்களைத் தேடித்தேடி வாங்க வேண்டிய காலம் இது. வாகனம் முதல் வீட்டுக்கான ஏ.சி., வரை, நிம்மதியான வாழ்வுக்குத் தேவைப்படும் வசதிகள் அதிகம். இந்தப் பொருட்களின் மீதான ஆசையே பலரின் தேடலுக்குக் காரணமாகிறது. ஆசையற்ற மனிதர்கள் தேங்கிப் போகிறார்கள். ஆசை கொண்ட மனிதர்கள் அசுர வேகத்தில் தேடித் தேடிப் பொருட்களை அடைகிறார்கள். ஒன்றை அடைந்ததும் இன்னொன்றுக்கு ஆசைப்படுகிறார்கள்.

## தேடலின் ரிலே ரேஸ்!

மரத்தில் வந்து அமரும் ஒரு பறவை, அங்கேயே இருப்பதில்லை. கிளைக்குக் கிளை தாவிச் செல்லும். அங்கிருந்து பறந்து வேறொரு மரத்தில் அமரும். இத்தனைக்கும் அது எந்த மரத்திலும் இரையை எடுத்திருக்காது, எந்த மரத்திலும் ஆபத்தும் இருந்திருக்காது. நிமிடத்துக்கு நிமிடம் இடம் மாறும் பறவை போலவே சில மனிதர்களின் தேடல் இருக்கிறது. கஷ்டப்பட்டுத் தேடி ஒன்றை அடைவார்கள். அடுத்த நிமிடமே அவர்களின் இலக்கு வேறொன்றாக மாறிவிடுகிறது. இதுதான் வளர்ச்சியைத் தருகிறது என்று வாதாடுகிறார்கள் பலர்.





இது உண்மைதான். கற்றுக்கொள்வதும், கற்றதை வைத்து வளர்ச்சி அடைவதுமே வாழ்க்கையின் இலக்கு. ஆனால், அது எப்படிப்பட்ட வளர்ச்சி என்பதையும் கவனிக்க வேண்டும். சிகரத்தைத் தொடும் ஒருவர் அங்கேயே இருப்பதில் அர்த்தமில்லைதான். அவர் அங்கிருந்து இறங்கித்தான் ஆக வேண்டும். ஆனால், அந்தச் சிகரத்தின் உச்சியைத் தொட்டதில் கிடைக்கும் மகிழ்ச்சியை அவர் நிதானமாக அனுபவிக்க வேண்டும். அவரின் அடுத்த இலக்கு இன்னொரு சிகரமாக இருக்க வேண்டும். ஆழ்கடலைத் தேடுகிறேன் என்று கிளம்பக்கூடாது. இதுவே எவருக்கும் நிறைவு தருவதாக இருக்கும். ●

# இன்று தேடுங்கள்!



‘தேடு… தேடு… தேடிக்கொண்டே இரு, தேடினால் கிடைக்காதது எதுவுமே இல்லை’ என்று ஒரு திரைப்படத்தில் ஹீரோவிடம் ஒருவர் சொல்லிக்கொண்டே இருப்பார். தேடும் ஒரு விஷயம் எதிர்பாராமல் எளிதில் கிடைத்தால் அது மகிழ்ச்சி தரும். நீண்ட தேடலுக்குப் பிறகு வெற்றியை ருசிப்பது ஒரு சுகம். தேடுபவர்களுக்கே எதுவும் கிடைக்கும். அப்புறம் பார்த்துக்கொள்ளலாம் என்று இருப்பவர்களின் வாசல் தேடி வெற்றிகள் வருவதில்லை.

ஒவ்வொரு நாளிலும் தேடலை இனிதே தொடர்வதற்கு சில யோசனைகள்:

➲ ஒரு திரைப்படத்தில் கவுண்டமணி ‘நான் எங்கே எப்படி இருந்திருக்க வேண்டியவன் தெரியுமா?’ என்பார். இப்படித்தான் பலர் இருக்கிறார்கள். ‘அது மட்டும் நடந்திருந்தால் இன்று நான் இப்படியா இருப்பேன்’ என்று புலம்புவார்கள். சரியான படிப்பைத் தேர்வு செய்யாதது, சரியான வேலையைத் தீர்மானிக்காதது, விலைக் குறைவாக இருக்கும்போதே வீடோ நிலமோ நகையோ வாங்காதது… இப்படிப் புலம்புவதற்கு ஆயிரம் காரணங்கள் இருக்கும். இந்தப் புலம்பல்களால் ஆகப் போவது எதுவுமே இல்லை. காலச்சக்கரத்தில் ஏறிப்போய்க் கடந்த காலத்தைத் தேடித் திருத்த யாராலும் முடியாது. நம் தேடல் எதிர்காலத்தைப் பற்றியதாக இருக்க வேண்டும்.



➲ கடந்த காலத் தவறுகளே சிலர் மனதில் எப்போதும் நிரம்பியிருக்கும். ஒரு தோல்வியை நினைத்து வருந்தும் மனிதர்கள், அந்தத் தோல்வித் தருணத்தில் மறுபடி மறுபடி வாழ்கிறார்கள். நிறைவேறாத கனவை நினைத்து ஏங்கும் மனிதர்கள், அந்த நிராசைக் கனவைத் திரும்பத் திரும்பக் காண்கிறார்கள். யாரோ உறவினர் ஒருவர் சொன்ன அவமரியாதையான வார்த்தையை அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்ளும் மனிதர்கள், அந்த வார்த்தையை மீண்டும் மீண்டும் கேட்கிறார்கள். இது அவர்களை மேலும் மேலும் முடக்கிப் போடுகிறது. வாகனங்களில் பின்னால் போவதற்கு ரிவர்ஸ் கியர் உண்டு, வாழ்க்கையில் அது கிடையாது. எனவே பின்னோக்கிப் போக ஆசைப்படாதீர்கள்.

➲ கடந்த காலத்தின் கசப்புகள் போல, இளமையின் இனிய நினைவுகளும் ஓர் அளவுக்கு மேல் தேவையில்லை. ‘எனக்குக் கிடைத்தது போன்ற இனிய குழந்தைப் பருவம் யாருக்கும் கிடைத்திருக்காது. அப்படி என்னைச் சீராட்டி வளர்த்தார்கள்’ என்று நினைப்பது மகிழ்ச்சி தரும். ஆனால் உடனடியாக, ‘குழந்தையாகவே இருந்திருக்கலாம். ஏன்தான் வளர்ந்தோமோ! ஏகப்பட்ட பிரச்னைகளைச் சமாளிக்க வேண்டியுள்ளது’ என்ற ஏக்கமும் எழும். பள்ளிக்காலம், இளமைப் பருவம் என்று எதை நினைத்தாலும் இப்படிப்பட்ட ஏக்கங்களைத் தவிர்க்க முடியாது. சில நிமிட இனிமையும் வேண்டாம், நீண்ட நேர ஏக்கமும் வேண்டாம்.

➲ கடந்த காலத்தை நினைத்துப் பகல்கனவு காண்பவர்கள், நிகழ்காலத்துக்கான நேரத்தை வீணடிக்கிறார்கள். இந்த நிமிடத்தில் செய்ய வேண்டியதைச் செய்தால் மட்டுமே, இப்போதைய வேலையை முடிக்க முடியும். அதுவே நிம்மதியான வாழ்க்கையை உத்தரவாதம் செய்யும். குடும்பச் செலவுகள், கடன்களுக்கான மாதத் தவணை, பள்ளி மற்றும் கல்லூரிக்





கட்டணங்கள் என்று எத்தனையோ பிரச்னைகளைச் சமாளிக்க வேண்டிய நேரத்தில் கடந்த காலம் குறித்த பகல்கனவு தேவையில்லை. கடந்த காலத்தையே அதிகம் நினைப்பவர்கள், நிகழ்காலத்தின் மீதான தங்கள் சக்தியை இழக்கிறார்கள்.

ஏன், எப்போது... இந்த இரண்டு கேள்விகளும்தான் பலரை நிம்மதி இழக்க வைக்கின்றன. 'என்னுடன் படித்த நிறைய பேருக்கு நல்ல வேலை கிடைத்து வாழ்க்கையில் நிம்மதியாக செட்டில் ஆகிவிட்டார்கள். எனக்கு மட்டும் குறைச்சலான சம்பளத்தில் சுமாரான வேலை கிடைத்தது ஏன்?' இந்தக் கேள்வி பலரின் மனதைக் குடைகிறது. 'என்னுடன் வேலை பார்க்கும் பலர் சொந்த வீடு கட்டிவிட்டார்கள். நான் வீடு கட்டுவது எப்போது?' இந்தக் கேள்விக்கு விடை தெரியாமல் தவிப்பவர்கள் பலர். ஒரு விதை முளைத்து, துளிர்விட்டு, பிரமாண்ட மரமாக வளர்வதற்கு இயற்கையின் கருணை காரணம். ஆனால், அந்த விதையின் முயற்சியைக் குறைத்து மதிப்பிட முடியாது. முயற்சி செய்யாமல் கேள்விகளை மட்டும் கேட்பதில் அர்த்தமில்லை.



சில பல திட்டமிடல்களின் கூட்டுக்கணக்கே ஒருவரின் எதிர்காலமாக அமைகிறது. உடல் எடையைக் குறைக்க வேண்டும் என்று நினைத்தால் அதை ஒரே நாளில் செய்ய முடியாது. தினம் தினம் கடுமையாக உடற்பயிற்சி செய்து, உணவு விஷயத்தில் கட்டுப்பாடு கடைப்பிடித்துப் படிப்படியாக அந்த இலக்கை அடைய வேண்டும். புதிதாக ஒரு விஷயத்தைக் கற்றுக்கொள்வது, வீடு வாங்குவது, வேலையில் வேறு ஓர் இடத்தை அடைவது என்று எல்லாவற்றுக்கும் இந்தத் திட்டமிடல் தேவை. தேடல் இருப்பவர்களே தெளிவாகத் திட்டமிடுகிறார்கள்.

ஒருவர் தன்னை மிக மோசமாக அவமானப்படுத்துவதற்குச் செய்யும் விஷயம்தான், அடுத்தவர்களுடன் ஒப்பிடுவது. அதையும் தவறாகவே பலர் செய்வார்கள். 'பக்கத்து வீட்டுக்காரர் கார் வாங்கிவிட்டார். நாம் இன்னமும் அதே பழைய பைக்கை ஓட்டிக்கொண்டு இருக்கிறோமே' என்று அந்தக் காரைப் பார்த்து பொறாமையில் பொங்குவார்கள் சிலர். இப்படி அடுத்தவர்களிடம் இருக்கும் எந்தப் பொருளும் பலரை வேதனையுடன் புலம்ப வைக்கிறது. தேடல் சரியாக இருப்பவர்கள் இதை வேறுவிதமாகச் செய்வார்கள். பக்கத்து வீட்டுக்காரரால் எப்படி கார் வாங்க முடிந்தது? நாம் தினமும் 8 மணி நேரம் உழைத்தால், அவர் 10 மணி நேரம் உழைக்கிறார். வார இறுதியில் நாம் ஓய்வெடுத்தால், அவர் தன் வேலை சார்ந்து புதிதாக ஒரு கோர்ஸ் படிக்கப் போகிறார். இப்படி அவரின் உழைப்பைப் பார்க்கும் கண்களுக்கு சீக்கிரம் கார் வாங்குவதற்கான வழி தெரிந்துவிடும்.

தேடலில் தெளிவாக இருப்பவர்கள், இந்தக் கணத்தில் தேங்கிப் போவதில்லை. அவர்கள் தோல்விகளில் துவண்டு போவதும் இல்லை, வெற்றிகளில் ஆர்ப்பாட்டம் செய்வதும் இல்லை. 'ஒரு தோல்வி என்பது இந்த நிமிடத்தின் விளைவு மட்டுமே, அதை மாற்ற முடியும்' என்பதை அவர்கள் உணர்கிறார்கள். 'வெற்றி என்பது இந்த நேரத்தின் சாதனை மட்டுமே, நாம் இதையே நினைத்துக்கொண்டிருந்தால் அடுத்து எதையும் செய்ய முடியாது' என்றும் அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். தொடர்ச்சியாக வெற்றிகளை அடைவது மட்டுமே மகிழ்ச்சியை நிரந்தரமாக்கும் வழி என்பதை உணர்ந்து தேடலைத் தொடர்கிறார்கள்.


# தேடுங்கள் கிடைக்கும்!


**தாங்கள் தேடியதை அடைந்த நான்கு பேரின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்கள் நமக்கு நிறைய கற்றுத் தரும்**

உலகின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவராகப் போற்றப்படுபவர் பாவ்லோ கொய்லோ. இன்று அவர் என்ன எழுதினாலும், அது உலகம் முழுக்க நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. அவர் எழுதிய 'ரஸவாதி' நாவல் உலகப்புகழ் பெற்றது. புதுமையான எழுத்துநடை, படித்து முடித்ததும் ஒருவருக்குக் கிடைக்கும் தன்னம்பிக்கை என அந்த நூல் ஏதேதோ மாயங்கள் செய்யும் என அவர் நம்பினார்.

30 ஆண்டுகளுக்கு முன்பு அதை முதன்முதலில் அச்சிட்டபோது, முதல் வாரத்தில் ஒரே ஒரு பிரதி விற்றது. அதன்பின் ஆறு மாதங்கள் கழித்து இரண்டாவது பிரதி விற்றது. ஒரு வருடம் ஆனது. வேறு யாருமே வாங்க வரவில்லை. பதிப்பாளர் நம்பிக்கை இழந்து புத்தக கான்டிராக்டை ரத்து செய்துவிட்டார். ஆனால், பாவ்லோ கொய்லோ நம்பிக்கை இழக்கவில்லை. பல ஆண்டுகள் தேடி வேறொரு நிறுவனத்தில் அதை மீண்டும் வெளியிட்டார். முக்கியமான நிறுவனம் என்பதால் கொஞ்சம் கொஞ்சமாக விற்க ஆரம்பித்தது. படித்தவர்கள் பாராட்ட, இன்னும் சிலர் வந்து வாங்கினார்கள். அப்படியே விற்பனை சூடுபிடித்தது. இன்று உலகம் முழுக்க பல மொழிகளில் 15 கோடி பிரதிகள் விற்றிருக்கிறது 'ரஸவாதி' நாவல்.

தன் தேடலை பாவ்லோ கொய்லோ கைவிட்டிருந்தால் இது நடந்திருக்காது. "ஒரு கனவு நிஜமாகும்போதுதான் வாழ்க்கை சுவாரசியம் அடைகிறது" என்கிறார் அவர்.




கூடைப்பந்து விளையாட்டு என்றாலே மைக்கேல் ஜோர்டான் என்ற பெயர்தான் நினைவுக்கு வரும். அந்த விளையாட்டின் வரலாற்றில் அவர் அளவுக்கு சிறந்த வீரர் யாருமில்லை. மைதானத்தின் எந்த மூலையில் நின்றபடியும் கூடைக்குள் துல்லியமாகப் பந்தை எறிவார் அவர்.

ஆனால், பள்ளியில் படிக்கும்போது அவரைக் கூடைப்பந்து அணியில் சேர்த்துக்கொள்ள மறுத்துவிட்டார்கள். 'சரியாக விளையாடத் தெரியவில்லை' என்று காரணமும் சொன்னார்கள். வீட்டுக்குப் போனதும் அன்று முழுக்க அறைக்கதவைப் பூட்டிக்கொண்டு அழுதான் சிறுவன் ஜோர்டான். என்றாலும் முடங்கிப் போகவில்லை. அடுத்த நாளே போய் ஒரு பயிற்சி மையத்தில் சேர்ந்தான். ஒரு வருடம் தீவிரமாகப் பயிற்சி எடுத்தான். வெறித்தனமாகப் பயிற்சி எடுத்ததன் விளைவாக அவன் நான்கு அங்குலம் வளர்ந்திருந்தான். அடுத்த ஆண்டு பள்ளியில் கூடைப்பந்து அணிக்கான தேர்வு நடந்தபோது அணியில் இடம்பிடித்தான். சீக்கிரமே அந்த அணியின் சிறந்த வீரன் என்ற பெயர் பெற்றான்.

ஜோர்டானின் கூடைப்பந்து திறமைக்காகவே அவருக்குக் கல்லூரியில் இடம் கிடைத்தது.

கல்லூரிகளுக்கான போட்டியில் அவர் ஆடியதைப் பார்த்து, அமெரிக்க நாட்டின் அணியில் அவரை சேர்த்துக்கொண்டார்கள். அதன்பின் அவரின் கைகளுக்கு ஓய்வே இல்லை. ஆறுமுறை தேசிய சாம்பியன்ஷிப் பட்டங்கள், ஐந்து முறை மிகச்சிறந்த வீரர் பட்டம் ஆகியவற்றுடன் அவர் ஓய்வு பெற்றபோது அமெரிக்காவே கண்ணீருடன் விடை கொடுத்தது.

முதன்முதலில் நிராகரிக்கப்பட்டபோது தன் தேடலை ஜோர்டான் நிறுத்தியிருந்தால் இதெல்லாம் நடந்திருக்காது. "ஜெயிக்க நினைப்பவர்கள் முதலில் தோற்கக் கற்றுக்கொள்ள வேண்டும்'' என்கிறார் ஜோர்டான்.

**ஜு**ராஸிக் பார்க் படம் வழியே உலகெங்கும் அறியப்பட்ட ஹாலிவுட் திரைப்பட இயக்குநர் ஸ்டீவன் ஸ்பீல்பெர்க். அமெரிக்காவின் புகழ்பெற்ற கலிபோர்னியா திரைப்படக் கல்லூரியில் படிக்க வேண்டும் என்பது அவர் கனவு. ஆனால், 'திரைப்படம் குறித்துப் படிக்கத் தகுதியில்லை' என மூன்று முறை அவரை நிராகரித்தது அந்தக் கல்லூரி. வேறொரு கல்லூரியில் சேர்ந்தார். யூனிவர்ஸல் ஸ்டுடியோ நிறுவனத்தில் பயிற்சி வாய்ப்பு கிடைத்ததும் படிப்பையே துறந்தார்.

ஒரு திரைப்படத்தை உருவாக்குவது எப்படி என்று அங்கேயே கற்றுக்கொண்டு, சின்னதாக ஒரு படத்தை எடுத்தார். யூனிவர்ஸல் ஸ்டுடியோ அதிபர்களுக்கு அதைப் போட்டுக்காட்ட முயன்றார். 'வேறு வடிவத்தில் எடுத்துக் காட்டினால்தான் பார்ப்பேன்' என்றார்கள் அவர்கள். இப்படி இரண்டுமுறை திருப்பி அனுப்பினாலும், மூன்றாவது முறை புதிதாக அதே படத்தை வேறு வடிவத்தில் எடுத்துக்கொண்டு வந்து நின்றார். 'இவர் திரும்பத் திரும்ப தொந்தரவு செய்கிறாரே' என்று வேண்டாவெறுப்பாக படம் பார்த்தார்கள். அதன்பின் பிரமித்துப் போய் அவரிடம் ஏழு ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்தார்கள். உலகப்புகழ் பெற்ற ஓர் இயக்குநர் இப்படித்தான் உருவானார்.

"சில சமயங்களில் ஒரு கனவு மெல்லிய குரலில் உங்கள் காதுகளில் வந்து பேசும். அதைக் கவனமாகக் கேட்டு வாழ்வில் முன்னேற வேண்டும் என்றால் தினம் தினம் தேடலுடன் இருக்க வேண்டும்" என்கிறார் ஸ்பீல்பெர்க்.






**கா**ல்பந்து விளையாட்டில் அதிகம் சம்பாதித்தவர் என்று அர்ஜெண்டினா நாட்டு வீரர் லயனல் மெஸ்ஸி கருதப்படுகிறார். இப்போதும் அதிக சம்பளம் பெறும் வீரர் அவர்தான். உலகின் சிறந்த கால்பந்து வீரருக்கான விருதை ஐந்துமுறை பெற்றவர். ஆனால், இந்த அந்தஸ்து அவ்வளவு எளிதில் கிடைத்துவிடவில்லை.

பள்ளிப் பருவத்திலிருந்து கால்பந்தே கதியென்று கிடந்தவர் மெஸ்ஸி. 11 வயதில் பள்ளி அணியிலிருந்து அவரை நீக்கிவிட்டனர். குள்ளமாகவும் நோஞ்சானாகவும் இருந்ததே காரணம். வளர்ச்சி ஹார்மோன் குறைபாட்டால், சக மாணவர்களைவிடக் குள்ளமாக இருந்தார் மெஸ்ஸி. அதன்பின் ஒவ்வொரு நாளும் ஹார்மோன் ஊசி போட்டுக்கொண்டார். வலியைத் தவிர்ப்பதற்காக ஏழு நாட்கள் ஒரு காலிலும் அடுத்த ஏழு நாட்கள் இன்னொரு காலிலும் போட்டுக்கொள்ள வேண்டும். ஆறு ஆண்டுகள் தொடர்ந்து ஊசி போட்டுக்கொண்டதால் இயல்பாக மாறி மீண்டும் அணியில் இடம்பிடித்தார். விடாமுயற்சி விஸ்வரூப வெற்றி.

இயற்கையே தனக்கு எதிராக இருந்தாலும் தன் முயற்சியால் சாதித்தார் மெஸ்ஸி. "ஒரு விஷயத்தை நீங்கள் மிகவும் நேசித்தால், எந்தத் தடையைக் கடந்தும் அதை அடைய முடியும்" என்கிறார் அவர்.




# தேடலுக்கு உதவும் 8 குணங்கள்!


கல்வி, வேலை, தொழில், வியாபாரம், வாழ்க்கை என்று எந்த விஷயத்திலும் உங்கள் தேடுதல் எதுவாக இருந்தாலும், அதை அடைவதற்கு எட்டு குணங்கள் முக்கியம். அவை இங்கே:



**1. செயலில் உங்கள் திறமை:** ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விஷயத்தில் மற்றவர்களைவிடத் திறமைசாலியாக இருப்பார்கள். இதைச் சிலர் நம்பமாட்டார்கள். காரணம், தங்கள் திறமை எது என்று அவர்கள் இதுவரை கண்டறியவில்லை. அந்தத் தனித்திறனைக் கண்டறிந்து, அதை வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டும். அந்தத் திறனுக்கு உகந்ததாக வேலை அல்லது தொழிலை அமைத்துக்கொள்ள வேண்டும். சம்பந்தம் இல்லாத இடத்தில் இருந்தால், உங்கள் திறமையைப் பயன்படுத்த முடியாது. உங்களுக்கும் மதிப்பு கிடைக்காது.

**2. முடியும் என்ற நம்பிக்கை:** நீங்கள் எதைச் செய்வதாக இருந்தாலும், 'இது என்னால் முடியும்' என்ற நம்பிக்கையுடன் களத்தில் இறங்க வேண்டும். உங்கள் உள்ளுணர்வு உங்களை வழிநடத்த வேண்டும். நம்பிக்கை இல்லாத செயல்பாடு என்பது, ஸ்டியரிங் வீல் இல்லாத கார் போன்றது. அது உங்களை எங்கேயும் கொண்டு சேர்க்காது. நீங்கள் செய்யும் செயலில், 'இது சரி, 'இது தவறு' என்று உலக நடப்புகளை அலசிப் பார்த்து முடிவுகள் எடுக்க வேண்டும். அதைச் செயல்படுத்தவும் வேண்டும். மதில் மேல் பூனையாக இருப்பவர்கள் எந்த இடத்துக்கும் போவதில்லை. சரியோ, தவறோ, ஏதோ ஒரு பக்கம் பயணம் செய்ய வேண்டும்.





**3. மனநிறைவுடன் செயல்பாடு:** படிப்பை முடித்து வேலை அல்லது தொழிலுக்குப் போனபிறகு நம் வாழ்வின் நீண்ட நேரத்தை

அதற்கே செலவிடுகிறோம். வாரத்தில் ஐந்தாறு நாட்கள் முழு நேரமும் அதையே செய்கிறோம், அது பற்றியே சிந்திக்கிறோம். ஆனால், பலரும் அரைமனதுடன்தான் தங்கள் வேலைகளைச் செய்கிறார்கள். தாங்கள் செய்யும் வேலை குறித்து திருப்தி இருப்பதில்லை. 'எப்படி இருக்கீங்க' என்று கேட்டால், 'ஏதோ இருக்கேன்' என்று விரக்தியாகச் சொல்வார்கள். காரணம், அந்த வேலையை அவர்கள் முக்கியமாக நினைப்பதில்லை. வருமானம் தரும் ஒரு விஷயம் என்பதால் மட்டுமே அதைச் செய்வதாக நினைக்கிறார்கள். ஆனால், ஒவ்வொருவருக்கும் அடையாளமே அவர்கள் செய்யும் அந்தப் பணிதான். அதுதான் அவர்களை வாழ்வில் உயர்த்துகிறது. அதுவே அவர்களுக்கு மரியாதை தருகிறது. 'இது இல்லாவிட்டால் நான் என்னவாக இருந்திருப்பேன்' என்பதை நினைத்தால் நிச்சயம் மனநிறைவு வந்துவிடும்.

**4. புதுமையும் கற்பனை சக்தியும்:** மனிதர்களைத் தனித்து அடையாளம் காட்டுவது, அவர்களின் சிந்தனைத்திறன்தான். விலங்குகள், பறவைகள் எல்லாமே ஒரே மாதிரி வாழ்ந்து முடிக்கின்றன. மனிதர்கள் மட்டுமே தங்கள் முன்னோர்கள் செய்ததை அப்படியே செய்யாமல், புதுமையாகச் சிந்தித்து வித்தியாசமாகச் செய்கிறார்கள். இந்தச் சிந்தனைத்திறனே மனித இனத்தை நாகரிகம் அடையச் செய்தது. ஒரு வேலையை மற்றவர்கள் செய்வது போலச் செய்யாமல் தன் தனித்திறமையால் புதுமையாகவும் வித்தியாசமாகவும் செய்பவர்கள் எளிதாக வாழ்வில் உயர முடியும். கூட்டத்தில் ஒருவராக இல்லாமல், அவர்கள் தனித்துத் தெரிவார்கள். அவர்களே தங்கள் கற்பனைத் திறனால் புதிய பாதைகளை உருவாக்குகிறார்கள்.



**5. சமூகத்துடன் இணைந்த பயணம்:** சுற்றமும் நட்பும் உறவுகளுமே நம் மகிழ்ச்சிக்கு அடித்தளம். எல்லோருடனும் இனிமையாக உறவை வளர்த்து, சமூகத்துடன் இணைந்திருக்க வேண்டும். பிறருக்கு உதவும் மனிதர்களுக்கே உதவிகள் தேடி வருகின்றன. யாருடைய பயணமும் தனியானது அல்ல. பலரின் உதவிகளுடன் வாழ்வில் முன்னேறும்போது, அந்த வாழ்க்கை அர்த்தமுள்ளதாக இருக்கும்.



**6. சுயமதிப்பு இழக்காமல் இருப்பது:** கண்ணாடியில் பார்க்கும் தன் உருவத்தை, தன் சுய அடையாளங்களை நேசிக்காத மனிதர்கள் மகிழ்ச்சியாகவும் அர்த்தமுள்ளவராகவும் வாழ முடியாது. நிறைய பேர் தங்களைப் பற்றித் தவறாகவே நினைக்கிறார்கள். தவறாகவே முடிவுகள் எடுக்கிறார்கள். தங்கள் தோற்றத்தில் தெரியும் குறைகள், தங்களின் பலவீனங்கள், தாங்கள் கற்றுக்கொள்ளாத விஷயங்கள் என்று எதிர்மறையாகவே நினைக்கிறார்கள். தங்களின் வலிமை எது என உணர்வதில்லை. அதைப் பெருமையாகவும் கருதுவதில்லை. அதற்காக நன்றி சொல்வதும் இல்லை. நேர்மறை எண்ணத்துடன் எதிலும் இறங்கினால், மனம் முழுக்க உற்சாகம் நிரம்பியிருக்கும். அதுவே நம்மைச் சாதிக்கத் தூண்டும்.





**7. பாதையில் மகிழ்ச்சி அடைவது:** ஒரு சுற்றுலா போகிறோம். அந்த இடத்துக்குப் போவது மட்டுமே மகிழ்ச்சி கொடுப்பதில்லை. வீட்டிலிருந்து கிளம்பி அதற்காகச் செய்யும் பயணம் முழுக்கவே நமக்கு மகிழ்ச்சி தருகிறது. எல்லா விஷயங்களிலும் இப்படிக் கருத வேண்டும். புதிதாக ஒரு விஷயத்தைக் கற்றுக்கொள்கிறீர்கள். அதில் நிபுணர் ஆன பிறகே மகிழ்ச்சி கிடைக்கும் என நினைக்காதீர்கள். தினம் தினம் அதைக் கற்கும்போது மகிழ்ச்சி ஏற்பட வேண்டும். இந்த மகிழ்ச்சியான மனநிலையே எதிலும் உங்கள் தேடல் இலக்கைச் சீக்கிரம் அடைய உதவும்.




**8. வாழ்வின் அர்த்தம் உணர்வது:** ஒருவரின் வாழ்வில் இரண்டு நாட்கள் மிக முக்கியமானவை. பிறக்கும் நாள் அதில் ஒன்று, நாம் எதற்காகப் பிறந்திருக்கிறோம் என்பதை உணரும் நாள் இரண்டாவது. ஏதோ ஒன்றைச் செய்து, எப்படியோ வாழ்ந்து முடிப்பவர்களுக்கு எந்த அடையாளமும் கிடைப்பதில்லை. அவர்கள் அப்படி எதையும் தேடுவதும் இல்லை. 'இவர் இப்படி வாழ்ந்தார்' என்று மற்றவர்களுக்கு உதாரணம் காட்டும்விதமாக வாழ்வதே அர்த்தமுள்ளது. 'இதைச் சாதிக்கவே நாம் பிறந்திருக்கிறோம்' என்பது போல ஏதோ ஒன்றைச் செய்து வெற்றி பெறுங்கள். அதில் கிடைக்கும் மனநிறைவை வேறு எதுவும் கொடுக்காது. ●

## கற்றுக்கொள்கிறோமா?

**ந**மக்கு என்ன நடக்கிறது என்பதைப் பொறுத்தது அல்ல நம் மகிழ்ச்சி. அந்த நிகழ்வுக்கு நாம் எப்படி ரியாக்ட் செய்கிறோம் என்பதைப் பொறுத்தே நமக்கு மகிழ்ச்சியோ, சோகமோ கிடைக்கிறது. மருந்துகளைப் போல மகிழ்ச்சிக்கு எக்ஸ்பயரி தேதி இல்லை. ஏதோ ஒன்று தவறாக நடக்கும்போது, நம்மையோ, அடுத்தவர்களையோ குற்றம் சொல்வதில் அர்த்தமில்லை. ‘இதிலிருந்து நான் என்ன கற்றுக்கொண்டேன்? அடுத்து நான் எடுக்க வேண்டிய சிறந்த முடிவு என்ன?’ என்று நம்மை நாமே கேட்டுக்கொண்டால் மகிழ்ச்சியை மீண்டும் வசப்படுத்த முடியும்.

நாம் எடுக்கும் முடிவுகளே நம் பாதையைத் தீர்மானிக்க வேண்டும். அடுத்தவர்களின் செயல்களை வைத்தோ, மற்றவர்களின் எதிர்பார்ப்புகளை வைத்தோ நம் செயல்பாட்டைத் தீர்மானிக்கக் கூடாது. நம்மை அளக்கும் அளவுகோல் மற்றவர்கள் கைகளில் இல்லை. நமக்கு எப்படிப்பட்ட வாழ்க்கை வேண்டும் என்பதை நாம்தான் முடிவு செய்ய வேண்டும். அந்த முடிவு சிறப்பாக இருந்தால், மகிழ்ச்சி நிரந்தரமாகும்.







## மகிழ்ச்சியைத் தேட வேண்டுமா?

**ஒ**வ்வொருவரின் பயணமும் மகிழ்ச்சியைத் தேடுவதாகவே இருக்கிறது. தேர்வில் நல்ல மார்க் வாங்கினால், நல்ல கல்லூரியில் படிக்கும் வாய்ப்பு கிடைத்தால், பெரிய நிறுவனத்தில் வேலை கிடைத்தால், வசதியான வாழ்க்கைத்துணை கிடைத்தால்... இப்படி மகிழ்ச்சி கிடைப்பதற்கான காரணங்களைப் பலரும் வாழ்வில் அடுக்குவார்கள். ஏதோ ஒரு பொருளோ, யாரோ ஒரு நபரோதான் தங்களுக்கு மகிழ்ச்சியைத் தருவதாக அவர்கள் நினைக்கிறார்கள்.

ஆனால், எந்தக் காரணமும் இல்லாமல் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கப் பழகும் மனிதர்களுக்கு மகிழ்ச்சியைத் தேட வேண்டிய அவசியமே கிடையாது. எது நடந்தாலும் அதை இயல்பாக ஏற்றுக்கொள்ளும் மனம் இருந்தால், மன உளைச்சல் ஏற்படாது. நல்லது நடந்தால் மகிழ்ச்சி கிடைக்கும். தவறாக நடந்தால், திருத்திக்கொள்வதற்கான வழியும் கிடைக்கும்.

## தள்ளிப் போடாதீர்கள்!

**கி**ரிக்கெட் விளையாட ஆசையா? வயதைப் பற்றிய கூச்சம் இல்லாமல் முயற்சி செய்துவிடுங்கள். ஓவியம் வரையத் தோன்றுகிறதா? இன்றே பழகிப் பாருங்கள். சுற்றுலா செல்வதில் மகிழ்ச்சி கிடைக்கும் என நம்புகிறீர்களா? உடனே போய்விடுங்கள். வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட வயதுக்குப் பிறகோ, ஓய்வுபெற்ற பிறகோ மட்டுமே சில விஷயங்களைச் செய்து மகிழ முடியும் என்று பலர் நம்புகிறார்கள். ஆனால், மகிழ்ச்சியைத் தரும் எந்தச் செயலையும் தள்ளிப் போடக்கூடாது.

மகிழ்ச்சி என்பது பறந்து செல்லும் ஒரு பட்டாம்பூச்சி போன்றது. நீங்கள் அதைப் பிடிப்பதற்கு ஓடினால், அது விலகிப் பறந்துகொண்டே இருக்கும். அமைதியாக அதை வரவேற்றால், உங்கள் தோள்களில் வந்து அமர்ந்துகொள்ளும்.



## நீங்களே பொறுப்பு!

**உ**ங்கள் வாழ்வின் மகிழ்ச்சி வேறு யாரோ சிலரால் கிடைப்பது இல்லை. அதற்கு நீங்கள் மட்டுமே பொறுப்பு. எத்தனையோ உணவுகள் இருந்தாலும், நமக்குப் பிடித்தமான, சுவையான உணவுகளை மட்டுமே தேடிப் பிடித்துச் சாப்பிடுகிறோம். உணவைப் போலவே உணர்விலும் சரியாகத் தேர்வு செய்ய வேண்டும். நம்மைச் சுற்றி என்ன நிகழ்ந்தாலும், 'மகிழ்ச்சியை மட்டுமே மனதுக்குள் அனுப்புவேன்' என்று உறுதி எடுக்க வேண்டும்.

சோகத்தைத் தேடித் தேடி தங்கள் மீது போர்த்திக்கொள்வது ஒருவித நோய். வாழ்க்கை முழுக்க மகிழ்ச்சியாக இருந்தவர்களும் யாருமில்லை; வாழ்க்கை முழுக்கச் சோகமாக இருந்தவர்களும் யாருமில்லை. எப்படிப்பட்ட சூழலிலும் மகிழ்ச்சியாக இருக்க ஒரே ஒரு காரணத்தைக் கண்டுபிடித்துவிட்டால் போதும். அடுத்தவர்களிடம் எதையும் யாசகம் கேட்க நாம் ரொம்பவே கூச்சப்படுவோம். நமக்கான மகிழ்ச்சியை யாரிடமும் யாசகமாகக் கேட்க வேண்டாம்.

## மகிழ்ச்சியின் அடையாளம் எது?

**ப**ணம் மட்டுமே மகிழ்ச்சியைத் தரும் என்று சிலர் நினைக்கிறார்கள். அதன் பின்னால் ஓடுகிறார்கள். போதுமான பணம் சேர்க்க வேண்டும் என்று இரவு பகலாக உழைக்கிறார்கள். தினமும் பல மணி நேரம் கடினமாக உழைத்து உடலை வருத்திக்கொள்கிறார்கள். பொழுதுபோக்க நேரமில்லை, நண்பர்களுடன் பேசுவதில்லை, குடும்பத்துடன் நேரம் செலவிடுவதில்லை. இதெல்லாம்தான் மகிழ்ச்சி தரும் என்பது அவர்களுக்குப் புரிவதில்லை. போதுமான பணம் வந்தால் சந்தோஷமும் அதன்கூட வந்துவிடும் எனக் கனவு காண்கிறார்கள். ஆனால், 'போதுமான பணம்' எவ்வளவு என்பது அவர்களுக்குத் தெரிவதில்லை.

ஒரு கட்டத்தில் உடல்நலம் கெட்டு, நண்பர்களை இழந்து, தனிமையில் வாடும்போதுதான் தவறவிட்ட சந்தோஷ வாய்ப்புகள் அவர்களுக்குப் புரியும். அப்போது காலம் கடந்து போயிருக்கும்.





## எதில் கிடைக்கிறது மகிழ்ச்சி?

**ஒ**வ்வொருவருக்கும் மகிழ்ச்சி வெவ்வேறு வடிவங்களில் கிடைக்கும். சிலருக்கு குடும்பத்தினர் முகத்தில் புன்னகையைக் கண்டால் மகிழ்ச்சி. சிலருக்கு மற்றவர்கள் தன்னை வணங்கினால் மகிழ்ச்சி. சிலருக்கு வசதிகளைத் தேடி அடைவது மகிழ்ச்சி. சிலருக்கு விருந்து சாப்பிட்டால் மகிழ்ச்சி. சிலருக்கு 10 ரூபாய் வருமானம் கிடைப்பது கூட மகிழ்ச்சி. ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சி கிடைப்பதற்கான காரணங்கள் மாறுபடும். ஆனால், எல்லோரும் அடைய நினைப்பது மகிழ்ச்சியைத்தான்!

மகிழ்ச்சி என்பது தேடி அடைய வேண்டிய இலக்கு அல்ல. அந்தத் தேடல் பயணமே மகிழ்ச்சியானதுதான். 'இசை என்பது ஒலி மட்டுமே அல்ல, ஒலிகளுக்கு இடையில் நிலவும் மௌனமும் இசைதான்' என்று புகழ்பெற்ற இசையமைப்பாளர் ஒருவர் சொன்னார். அப்படித்தான் வேதனை தரும் இரண்டு பிரச்னைகளுக்கு இடைப்பட்ட காலம் முழுக்க மகிழ்ச்சியே இருக்கிறது. நாம்தான் அதை அறிவதில்லை. ●

**இ**ந்தத் தேடல் இருக்கிறதே...
இது எதற்காக
காலச் சக்கரத்தை
நிறுத்தித் தொலைக்கிறது.
இந்தத் தேடல் இருக்கிறதே...
இது எதற்கு
பெருங்கூட்டத்திலும்
தவித்துப் போய்க் கிடக்கிறது
இந்தத் தேடல் இருக்கிறதே...
இது எதற்கு
நிமிடத்திற்கு நிமிடம்
நிறம் மாறி விடுகிறது
இந்த தேடல் இருக்கிறதே...
இது எதற்காக
எப்போதும் தீராப்பசியென
இருக்கிறது.

– இசைமலர்




**தே**டிச் செல்லாத வாழ்க்கைப் பயணங்கள்
ஓடாது நிற்கும் கடிகார முட்கள்.
மேகத்தின் தேடல்கள் மழையாய்ப் பொழிகிறது.
சோகத்தின் தேடல்கள் கண்ணீராய் வழிகிறது.
பணத்தின் தேடல்கள் பகையில் முடிகிறது.
பாசத்தின் தேடல்கள் உறவாய் மலர்கிறது.
நிஜங்களைத் தேடியதும் திரும்பிப் பார்த்தால்
நினைவுகள் ஆயிரம் கதைகள் சொல்கிறதே...
நிம்மதி என்ற ஒன்றை மட்டும்
நிதம் தேடி மனமும் அலைகிறதே..

– இதயம் விஜய்




**பா**ல்யத்தின் பசுமையான நினைவுகளை
தன் வயதுடையவர்களாய்த் தேடித்தேடி
பகிர்ந்து கொண்டிருக்கிறார்,
பால்ய சிநேகிதனைத் தேடிக்கொண்டிருக்கும்
பார்வை மங்கிப் போன முதியவர்...
தன் பால்ய கால சிநேகிதனை
அவர் கண்டடையும் வரை
வழியெங்கும் மலர்ந்துகொண்டே இருக்கிறது
அந்திமக்கால சிநேகிதங்கள்!

– ஜெகதீஷ்



**தொ**டக்கத்தில் பிறப்பு தேடல்!
பிறந்த பின்னே இறப்பு தேடல்!
வறுமைக்குப் பணம் தேடல்!
பணத்திற்கு நிம்மதி தேடல்!
ஏமாந்த மனதிற்குத் தனிமை தேடல்!
ஏகாந்த தனிமைக்கு உறவுகள் தேடல்!
பசிக்கும் உடலின் உணவு தேடல்!
பணம் பெருத்த பின் பசியே தேடல்!
வாழ்வில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தேடல்!
வாழும் வாழ்க்கையே ஒருவகைத் தேடல்!

– சிந்தை சீனிவாசன்



**தே**டித் தொலைகிற
வாழ்க்கையில்
தொலைத்ததையும்
தேடுகிறேன்...

– கார்த்திகேயன் ஆறுமுகம்







**அ**றிவுத் தேடல் கற்றுத் தரும்,
பணத் தேடல் உழைப்பைத் தரும்,
அன்புத் தேடல் இன்பம் தரும்,
நிறைவுத் தேடல் தெளிவு தரும்,
தேடலே தோன்ற வைக்கும்,
தேடலே பலப்படுத்தும்,
தேடலே ஊக்குவிக்கும்,
தேடலே ஒப்பற்ற மனிதனாக்கும்.

– எஸ்.கவிதா


RAMRAJ
LittleStars®
KIDS DHOTI • SHIRT
STAY STYLISH,
STAY MODERN


மென்மையில்
வெண்மை
உங்கள் கம்பீரத்தை இன்னும்
அழகாய் காட்டுகின்ற
ராம்ராஜ் சர்ட்டுகள்
SCAN THE QR
CODE TO WATCH
For the Prestigious People...
RAMRAJ ©
COTTON SHIRTS
Available at Company Showrooms & All leading Textile Shops
shop online@ www.ramrajcotton.in


Shirt
Created For
ALL SEASON
Crafted for comfort
LINEN PARK®
LINEN DHOTIS SHIRTS FABRICS
A Premium Product from
RAMRAJ©



Ramyyam®
COTTON - SILK SAREES
Product by
RAMRAJ
A divine fold for you
www.ramrajcotton.in

# ட்விட்டர் தேடல்




**@Kuttyma_Twitz**

தேவை இருக்கும் வரை தேடல் முடிவதில்லை. நம்பிக்கை இருக்கும் வரை நம் வாழ்க்கை சலிப்பதில்லை...

**@solai_raaja**

எதிர்பார்ப்பில்லாத தேடல் மிகச் சுவையானதாக அமைகிறது. ஒரு மனநிறைவுடன் முடிகிறது!

**@fazzz_7**

இல்லாதபோது தேடல் அதிகம். இருக்கின்றபோது அலட்சியம் அதிகம்.

**@CanadaShirdi**

எந்த ஒரு செயலையும் ஆர்வம் குறையாமல் நம்பிக்கையுடன் ஆரம்பியுங்கள். வெற்றி தானாகவே நம்மைத் தேடி வரும்.

**@prabhurc44**

சில நினைவுகள் புதையல் போன்றவை. அதனால்தானோ என்னவோ, நம் தேடல் அதிகமாகிறது.

**@Qalbi_zm**

நாம் யாரை அதிகமாகத் தேடுகிறோமோ, அவர்களின் தேடல் நாமாக இருக்கமாட்டோம்.

**@iamponthilaka**

ஒவ்வொரு வயதிலும் ஒவ்வொரு தேடல்... ஆனால் எல்லா வயதிலும் அன்புக்கான தேடல் தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது.

**@visva89529794**

அன்புக்குரியவர்கள் தொலைந்திடவெல்லாம் இல்லை, தொலைவில் மட்டுமே இருக்கிறார்கள். உங்கள் தேடல் அவர்கள் மட்டுமே என்பதை உறுதி செய்வதற்காக..!

**@Sairam2392**

வாழ்க்கையில் தேடல் எப்போதும் வேண்டும். தேடல் இருக்கும்பட்சத்தில் மட்டுமே புதுவிதமான அனுபவங்கள் வாய்க்கும். வாழ்க்கையின் சுவாரசியமும் நமக்குக் கிடைக்கும்.

**@Its_kavi2122**

தேடல் பயணத்தில் தேடியது தவிர்த்து எது கிடைத்தாலும் அது லாபக் கணக்கு. எதையாவது இழந்தால் அது வழிச்செலவு. தேடியது கிட்டும் வரை பயணத்தைத் தொடருங்கள். அதுவே வெற்றிக்கு வழி!

**@Icydoll529**

தேடலில் மட்டுமே உள்ளது நம் வாழ்க்கை. தேடியது கிடைத்துவிட்டால் புதிய தேடல் ஆரம்பமாகும். அடுத்தடுத்து இப்படித் தேடல் தொடரும். தேடல் முடியும்போது வாழ்க்கையும் முடிகிறது.

**@mujib989898**

உனக்கானதைத் தேடு... அதுவும் உனக்காகவே காத்திருக்கும்.

**@Ungal_Isaiarasi**

நிராகரிப்பைச் சந்திக்கும்போது நிலைத்து நிற்க வழி தேடுங்கள். வாழ்வில் ஏமாற்றங்கள் இருக்காது.

**@Rameshpearlcity**

நீ ராஜாவாக ஆக விரும்பினால் ராணியைத் தேடாதே... ராஜ்ஜியத்தைத் தேடு!

**@raajappu**

வழி இருப்பது உண்மை... தேடுவது நம் திறமை!

**@nskarthim**

மற்றவர்களின் நிலை அறிய நிம்மதியற்றுத் திரிவதைவிட, தன்நிலை அறிந்து அதை மேம்படுத்துவது எப்படி என அதற்கான வழிகளைத் தேடுவது சிறந்தது!

**@mujib989898**

இழந்ததை விதி மேல் பழிபோட்டு ஆறுதல் அடைவது ஒரு குணம். எப்படி இழந்தோம் என்று தேடிப் பார்த்து, விட்டதை அடைந்து வெற்றி பெறுவதும் ஒரு குணம்தான். தன்னம்பிக்கை போலவே வாழ்க்கை.

**@its_Surace**

தொலைந்த பொருளை தேடி அடைந்துவிடலாம்... தொலைத்த பொருளை தேடி அடைவது அவ்வளவு எளிதல்ல!

**@SagaMageshwar**

வெற்றி என்பது நம்மைத் தேடி வருவதல்ல... நாம் தேடி அடைவது..!

**@SairSairam**

ஒருவரிடம் உண்மையும் உழைப்பும் இருந்தால், கண்டிப்பாக உயர்வும் வாழ்வின் உன்னத நிலையும் அவரைத் தேடி வரும்.

**@imemyselfsuresh**

தானாகக் கிடைக்கும் பொருளை மூளையும், தானாகத் தேடி வரும் அன்பை மனதும் எப்போதும் மதிக்காது!

**@enkavithai7**

எல்லா இடங்களிலும் சந்தோஷம் இருக்கும்... அதை நாம்தான் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.





# வாழ்வின் அர்த்தம் தேடுங்கள்!

நீங்கள் விரும்பிய விதத்தில் உங்கள் வாழ்க்கை அமைந்திருக்கிறதா? உங்கள் மனதுக்கு மகிழ்ச்சி கிடைக்கிறதா? மனதுக்கு நிறைவு தரும் செயல்களை நீங்கள் செய்கிறீர்களா? இந்தக் கேள்விகளுக்குச் சரியான பதில்கள் கிடைத்தால் மட்டுமே உங்கள் வாழ்வில் அர்த்தம் உணர்வீர்கள். நிறைவாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்கு, வாழ்வின் அர்த்தம் தேடுவது அவசியம். அதற்கு நீங்கள் செய்ய வேண்டியவை:

- உங்களுக்கு மகிழ்ச்சி தரும் செயல்கள் எவை, உங்களுக்கு மிகவும் விருப்பமானவை எவை, எதில் உங்களுக்கு ஆர்வம் என்று ஒரு பட்டியல் போடுங்கள். இவை உங்கள் வேலை சார்ந்தவையாக இருக்கலாம், தனிப்பட்ட வாழ்க்கை சார்ந்தவையாகவும் இருக்கலாம். நேரம் போவதே தெரியாமல் எந்தெந்த வேலைகளை விரும்பிச் செய்கிறீர்கள், எதைச் செய்தால் உங்களுக்கு மகிழ்ச்சி கிடைக்கிறது என்ற அடிப்படையில் இந்தப் பட்டியல் இருக்க வேண்டும்.

- உங்களை நீங்களே சில கேள்விகள் கேட்டுக்கொள்ளுங்கள். நீங்கள் இப்போது செய்வது என்ன, இனி செய்ய வேண்டியது என்ன என்பதை அவை உணர்த்தும். உங்களிடம் எதை நினைத்து நீங்கள் பெருமைப்படுகிறீர்கள்? மற்றவர்களின் எந்தப் பண்புகளைப் பார்த்து நீங்கள் வியக்கிறீர்கள்? எதைச் செய்யும்போது உங்களுக்கு அளவு கடந்த உற்சாகம் கிடைக்கிறது? ஒவ்வொரு நாளிலும் எந்த அளவுக்கு மகிழ்ச்சியாக உணர்கிறீர்கள்? உங்கள் ஆயுட்காலம் இன்னும் ஒரு மாதம்தான் என்றால், அந்த ஒரு மாதத்தை நீங்கள் எப்படி செலவழிப்பீர்கள்? இந்த உலகில் ஏதாவது ஒரு விஷயத்தை மாற்றும் சக்தி உங்களுக்குக் கிடைத்தால், எதை மாற்றுவீர்கள்? வாழ்க்கையில் கண்டிப்பாக செய்தே ஆக வேண்டும் என்று நீங்கள் நினைப்பது எதை? எந்த மாற்றத்தைச் செய்தால் உங்கள் வாழ்க்கை மகிழ்ச்சியாகும்? இந்தக் கேள்விகளுக்கு ஒளிவுமறைவில்லாமல் விடை தேடுங்கள்.

- நீங்கள் எந்தச் செயல்களை அதிகம் விரும்புகிறீர்கள், யார் யாரை மனப்பூர்வமாக நேசிக்கிறீர்கள் என்று மனதுக்குள் ஒரு பட்டியல் போடுங்கள். அந்தச் செயல்களுக்காகவும் அந்த மனிதர்களுக்காகவும் எவ்வளவு நேரம் செலவழிக்கிறீர்கள் என்று யோசித்துப் பாருங்கள். அந்த நேரமே உங்களுக்கு மகிழ்ச்சி தருவது. அதை அதிகமாக்குங்கள்.

- ஒரு குழந்தை போல எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லாமல் மகிழ்ச்சியாக இருப்பது வரம். அப்படிப்பட்ட மகிழ்ச்சி உங்களுக்குக் கடைசியாக எதில் கிடைத்தது,

யாருடன் இருக்கும்போது கிடைத்தது என்று யோசித்துப் பாருங்கள். அப்படி உங்களுக்கு மகிழ்ச்சியை வழங்கும் செயல்களை அடிக்கடி செய்யுங்கள்.

உங்களுக்கு 90 வயது ஆகிவிட்டதாகக் கற்பனை செய்யுங்கள். அப்போது உங்கள் வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்தால் என்னென்ன விஷயங்களில் மன நிறைவு கொள்வீர்கள்? குடும்பத்தில் எல்லோருக்கும் நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுத்தது, சொந்த வீடு கட்டியது, ஓய்வுக்காலத்திலும் வருமானத்துக்கு ஒரு வழி அமைத்துக்கொண்டது, இதெல்லாம்தான் நிறைவு தருகிறதா? அப்படிப்பட்ட விஷயங்களை இப்போதே திட்டமிடுங்கள்.

வாழ்க்கையில் உங்களுக்கு ரோல் மாடலாக இருப்பவர்கள் யார்? அவர்களின் எந்தப் பண்பு உங்களை வசீகரிக்கிறது? அவர்களிடமிருந்து எதைக் கற்றுக்கொள்ள நினைக்கிறீர்கள்? மனதுக்குள் ஒரு பட்டியல் போட்டு அதையெல்லாம் செய்யுங்கள். நிறைவாக வாழ்ந்து, நீங்களும் சிலருக்கு ரோல்மாடல் ஆவீர்கள்.

நிறைய பேர் தங்களைச் சுற்றி ஒரு வட்டம் போட்டுக்கொள்கிறார்கள். அதையே பாதுகாப்பாக நினைக்கிறார்கள். அதைத் தாண்டி வெளியில் செல்லவோ, புது மனிதர்களைச் சந்திக்கவோ அவர்கள்



விரும்புவதில்லை. அந்த வட்டத்தைத் தாண்டி வெளியில் செல்லும்போதுதான் வேறோர் உலகத்தை உங்களால் பார்க்க முடியும். உங்கள் ஆர்வத்தையும் திறமைகளையும் அந்த உலகத்தில் வைத்து மதிப்பிட முடியும். புதிய மனிதர்களுடன் பழகும்போது, அவர்களிடமிருந்து புதுப்புது விஷயங்களைக் கற்றுக்கொள்ள முடியும்.

உங்களின் பலம் எது, பலவீனம் எது என்று மதிப்பிடுவதில் உங்களுக்குக் குழப்பங்கள் இருக்கலாம். நெருங்கிய நண்பர்களிடம் இதைக் கேளுங்கள். உங்களுக்கு மகிழ்ச்சி தரும் செயல்களைச் செய்வதற்கு உங்கள் பலத்தைப் பயன்படுத்துங்கள்.

'இந்த ஒரு விஷயம் நடந்தால்தான் எனக்கு மகிழ்ச்சி கிடைக்கும்', 'என் எதிர்காலமே இதில்தான் இருக்கிறது' என்று ஏதோ ஒரு விஷயத்துக்கு அளவு கடந்த முக்கியத்துவம் கொடுக்காதீர்கள். 'இது இல்லை என்றால் அது' என்பது போல வாய்ப்புகளைப் பிரித்து வையுங்கள். இன்று பெரிய நிறுவனங்களே ஒரே நேரத்தில் பல தொழில்களைச் செய்கின்றன. ஒன்றில் தடுமாற்றம் ஏற்பட்டால், இன்னொன்றை வைத்துச் சமாளிக்கின்றன.

அதேபோல உங்கள் வாழ்க்கை மகிழ்ச்சிக்கும் யாரோ ஒருவரை மட்டுமே சார்ந்திருக்காதீர்கள். உறவுகள், நண்பர்கள், அலுவலக சகாக்கள் என்று எல்லோருடனும் பழகுங்கள். அவர்களை நீங்கள் மகிழ்ச்சியாக வைத்திருந்தால், அவர்களும் உங்களுக்கு மகிழ்ச்சி தருவார்கள்.

உங்கள் வாழ்க்கையின் முக்கியமான இலக்கு என்ன? நல்ல வேலை, வசதியான வாழ்க்கை, லாபம் தரும் ஒரு தொழில், வித்தியாசமான ஒரு வியாபாரம்... எதுவாக இருந்தாலும் அதைத் திட்டமிட்டு, வாழ்க்கையை அதை நோக்கி நகர்த்துங்கள். காலம் மாறும்போது உங்கள் இலக்கும் மாறலாம். அப்போது அதற்கு ஏற்றபடி மாறிவிடுங்கள். 'நாம் சரியான திசையில்தான் செல்கிறோமா' என்பதை அடிக்கடி உறுதி செய்யுங்கள். படிப்பு, வேலை, தொழில், வாழ்க்கை என்று எல்லாத் தளங்களிலும் உங்களின் பெரும்பாலான செயல்கள் அந்த இலக்கை நோக்கியதாக இருக்க வேண்டும்.

உங்கள் கவனத்தைத் திசைதிருப்பும் எந்த விஷயத்துக்கும் இடம் கொடுக்காதீர்கள். சில சமயங்களில் பொழுதுபோக்குகள், கேளிக்கைகள் தேவைப்படலாம். ஆனால், 'இப்படியே இருப்பதுதான் மகிழ்ச்சி தருகிறது' என்று நினைத்துக் கேளிக்கைகளில் மட்டுமே மூழ்கிவிடாதீர்கள். தற்காலிக மகிழ்ச்சிக்கும், நிரந்தர மகிழ்ச்சிக்கும் வித்தியாசம் உண்டு. வாழ்க்கையில் நிறைவு பெறுவதே நிரந்தர மகிழ்ச்சியைத் தரும்.

இலக்கைக் குறிவைத்து வாழும்போது உங்கள் கண்ணெதிரே இருக்கும் பல வாய்ப்புகள் தெரியும். முடிவுகள் எடுப்பதும் எளிதாகும். 'இந்த வாய்ப்பு என் வாழ்வுக்கு அர்த்தம் சேர்க்குமா? இதைச் செய்வதன் மூலம் நம்மால் முன்னேற முடியுமா?' என்று ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் செய்வீர்கள். 'எதை நாம் செய்ய விரும்பவில்லை' என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்டு தவிர்த்துவிடுவீர்கள். எதைச் செய்ய விருப்பமோ, அதைச் செய்வீர்கள். ●

# பொருத்தமாக வேலை தேடுங்கள்!



பெரிய நிறுவனத்தில் நல்ல வேலை கிடைக்க வேண்டும் என்பது நிறைய பேரின் கனவு. அந்தக் கனவை நிஜமாக்குவது எப்படி என்று பலருக்குத் தெரிவதில்லை. வேலை தேடுபவர்கள் மத்தியில் ஒருபக்கம் போட்டி அதிகரித்துள்ளது; அதே சமயத்தில் பெரிய நிறுவனங்களும் திறமைசாலிகளை வலைவீசித் தேடிக்கொண்டிருக்கின்றன. அதாவது, படித்து முடித்தவர்கள் வேலை தேடுவது போலவே, வேலைக்குப் பொருத்தமான மனிதர்களை நிறுவனங்களும் தேடுகின்றன. இந்தத் தேடலில் சரியாகப் பொருந்தி ஒரு வேலைக்குத் தேர்வு பெறுவது என்பது ஒரு கலை.

தங்கள் பொருட்களின் தரத்தைப் பிரமாதமாக விளம்பரப்படுத்தி நிறுவனங்கள் விற்கின்றன. அதேபோல வேலைக்கான மார்க்கெட்டில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி ஒருவர் தன்னை நல்ல சம்பளத்துக்கு விற்றுக்கொள்ள வேண்டும். 'வேலை தேடல்' என்பதன் எளிமையான விளக்கம் இதுதான். அதற்கு சில வழிகளைப் பயன்படுத்த வேண்டும்.

● 'எந்த வேலை கொடுத்தாலும் பரவாயில்லை சார், சிறப்பா செய்வேன்' என்று சொல்பவர்களைப் பெரும்பாலான நிறுவனங்கள் விரும்புவதில்லை. 'நான் இந்த ஒரு விஷயத்தில் கில்லாடி. எனக்கு இதில் மிகச்சிறந்த திறமை இருக்கிறது. இந்த வேலையை நான் செய்வதைப் போல யாராலும் செய்ய முடியாது' என்று தன்னம்பிக்கையுடன் குறிப்பிட்ட ஒரு வேலையைக் கேட்பவர்களுக்கே வரவேற்பு இருக்கிறது. எனவே, நாம் எந்த வேலைக்குப் போவது என்ற தெளிவு வேண்டும். ஒருவரின் படிப்பு, அவருக்கு இருக்கும் திறமைகள், அவரின் பலம், அந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் மற்றவர்களைவிடக் கூடுதலாக இருக்கும் அறிவு... ஆகியவற்றின் அடிப்படையில் வேலை தேட வேண்டும்.

● ஒரு வேலையில் நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்பதைத் தெளிவாக வரையறுக்க வேண்டும். எப்படிப்பட்ட நிறுவனத்தில் வேலை, அந்த வேலையில் என்ன சம்பளம் எதிர்பார்க்கிறீர்கள், சம்பள உயர்வு மற்றும் பதவி உயர்வு போன்றவை அடிக்கடிக் கிடைக்குமா, எந்த இடத்தில் வேலை செய்ய வேண்டியிருக்கும், அந்த வேலை மனநிறைவு தருமா என எல்லாவற்றையும் பரிசீலிக்கவும். ஏ.சி., அறையில் உட்கார்ந்து வேலை பார்க்க ஆசைப்பட்டவருக்கு மெஷின்கள் சத்தமிடும் புழுக்கமான தொழிற்சாலை நிம்மதி தராது. வீட்டுச் சாப்பாட்டின் ருசிக்கு அடிமையான ஒருவரால், வேற்று மாநிலத்தில் பிடிக்காத சாப்பாட்டைச் சாப்பிட்டபடி வேலைசெய்ய முடியாது.

● எந்த நிறுவனத்தில் வேலை செய்வது உங்கள் கனவு? அந்த நிறுவனத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்யுங்கள். எப்படிப்பட்ட நபர்களுக்கு அங்கு வாய்ப்பு தருகிறார்கள்? என்னென்ன திறமைகளை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்? எப்படிப்பட்ட பண்புகளை அவர்கள் விரும்புகிறார்கள்? எல்லாவற்றையும் அறிந்துகொண்டு அதேபோல மாறுங்கள்.

● படித்து முடித்துவிட்டு அனுபவம் ஏதும் இல்லாமல் கல்லூரியிலிருந்து வெளியே வரும் இளைஞர்களைச் சில பெரிய நிறுவனங்கள் நேரடியாகப் பணிக்கு எடுப்பதில்லை. அதேசமயத்தில், வேறு சிறிய நிறுவனங்களில் பணியில் இருப்பவர்களை வேலைக்கு எடுப்பார்கள். அப்படிப்பட்ட சிறிய நிறுவனம் ஒன்றில் வேலைக்குச் சேர்ந்து, அனுபவங்களை சேகரித்துக்கொண்ட பிறகு பெரிய நிறுவனத்துக்கு முயற்சி செய்யலாம்.

● நிறைய பேர் தங்கள் ரெஸ்யூமில் வளவளவென்று ஏதேதோ விஷயங்களைச் சேர்த்து வைத்திருப்பார்கள்.





ஆனால், ரெஸ்யூம் என்பது எளிமையாக இருக்க வேண்டும். நீங்கள் எந்த வேலைக்கு விண்ணப்பம் செய்கிறீர்களோ, அதற்குப் பொருத்தமாக என்ன தகுதியும் திறமையும் உங்களிடம் உள்ளது என்பதை உங்கள் ரெஸ்யூம் விளக்கினால் போதும். ஒரு நிறுவனத்தில் உங்கள் ரெஸ்யூமை ஆய்வு செய்ய சில நிமிடங்களே ஒதுக்குகிறார்கள். அந்த நேரத்துக்குள் அவர்களை அது இம்ப்ரஸ் செய்ய வேண்டியது முக்கியம்.

● 'எனக்கு இத்தனை ஆண்டுகள் அனுபவம் இருக்கிறது' என்று ரெஸ்யூமில் குறிப்பிடும் ஒருவர், தான் இதற்குமுன்பு வகித்த பொறுப்புகளை மட்டுமே விவரிக்கக்கூடாது. 'இத்தனை பேருக்கு சூப்பர்வைஸராக இருந்தேன்', 'இத்தனை துறைகளைப் பார்த்தேன்' என்று பொத்தாம்பொதுவாக இல்லாமல், 'இந்த வேலையில் இப்படிப்பட்ட சாதனைகளைச் செய்தேன்' என்று சில விஷயங்களைக் குறிப்பிடுங்கள். சாதனையாளர்களையே நிறுவனங்கள் வரவேற்கின்றன.

● ஒருவரை வேலைக்கு எடுப்பதற்கு முன்பு அவரது கேரக்டரை நிறுவனங்கள் கண்காணிக்கின்றன. ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் போன்ற சமூக வலைதளங்களில் அவர் என்னென்ன ஷேர் செய்திருக்கிறார் என்று பார்க்கிறார்கள். அடுத்தவர்களை வம்புக்கு இழுக்கும் பதிவுகள், வெறுப்பை உமிழும் பதிவுகள் போன்றவற்றை எழுதுபவர்களை எந்த நிறுவனமும் விரும்புவதில்லை. 'அலுவலகத்துக்குள் வந்து அவர் இப்படித்தான் இருப்பாரோ' என்று யோசிக்கின்றன. அதேபோல் இமெயில் ஐ.டி விஷயத்திலும் கவனமாக இருக்க வேண்டும். 'டான்', 'ச்சீயான்' என்பது போன்ற அடைமொழிகளுடன் மெயில் ஐ.டி வைத்திருப்பவர்களை முதல் கட்டத்திலேயே வடிகட்டி விடுகிறார்கள்.

● லிங்க்டு இன் போன்ற சமூக வலைதளங்கள் வேலை தேடுவோருக்குப் பெரிதும் உதவுகின்றன. இதில் ஒவ்வொருவரும் எழுதும் பதிவுகளைப் பார்த்து நிறைய நிறுவனங்கள் ஆட்களைத் தேடுகின்றன. பெரிய நிறுவனங்களில் ஆட்களை எடுக்கும் பொறுப்புகளில் இருப்பவர்களை இந்தத் தளத்தின் மூலம் அணுக முடியும்.

● 'உங்களுக்குத் தெரிந்தவர்கள் யாராவது திறமைசாலிகள் இருந்தால் சொல்லுங்கள்' என்று நிறைய பேரிடம் ரெஃபரன்ஸ்கள் கேட்கப்படுகின்றன. 'நமக்குத் தெரிந்த ஒரு பையன் இருக்கான்' என்று சிலர் பரிந்துரையும் செய்கிறார்கள். எனவே, எங்கு வேலையில் சேர்ந்தாலும் நல்ல மனிதர்களின் தொடர்புகளை வளர்த்துக்கொள்ளுங்கள். நீங்கள் திறமையாக வேலை செய்பவர் என்பதை அவர்களிடம் நிரூபித்துவிடுங்கள். பிறகு அவர்களே உங்களுக்கான வாசல்களைத் திறந்துவைப்பார்கள்.

● நீங்கள் எந்த வேலையைச் செய்கிறீர்களோ, எந்த வேலையில் அடுத்த கட்டத்துக்குப் போக வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்களோ, அது தொடர்பான திறமைகளைத் தினம் தினம் வளர்த்துக்கொள்ளுங்கள்.

● வேலை தேடும்போது எந்தக் கட்டத்திலும் சோர்ந்து போகாதீர்கள். சிலருக்கு அதிர்ஷ்டவசமாக ஒரே நாளில் வேலை கிடைத்துவிடும். பலருக்கு நாள்கணக்கில் இழுக்கும். உற்சாகம் இழக்காமல் வேலைக்கான நேர்முகத் தேர்வுகளை அணுகுங்கள். உங்களை நேர்காணல் செய்பவர்களுக்கு எரிச்சலோ, அலுப்போ ஏற்படாதபடி சுவாரசியமாக பதில்களைச் சொல்லுங்கள். 'உங்களைப் பற்றி அறிமுகம் செய்துகொள்ளுங்கள்', 'இந்த வேலையை ஏன் விரும்புகிறீர்கள்' என்பது போன்ற சம்பிரதாயமான கேள்விகளுக்குக்கூட சுவாரசியமாக பதில் தரலாம். நேர்காணல் முடிந்ததும், மறக்காமல் நன்றி சொல்லுங்கள். நேர்மறையாக நேர்காணலை அணுகினால் வெற்றி நிச்சயம். ●



# கல்லூரி ஆண்டு விழாவில் ராம்ராஜ்!

ஈரோடு திண்டல் பகுதியில் உள்ள வேளாளர் கல்வி நிறுவனங்களின் ஆண்டு விழா 30.04.2022 அன்று நடைபெற்றது. இதில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் கோப்பைகளை வழங்கி அவர் சிறப்புரையாற்றினார். திரு. நாகராஜனின் தன்னம்பிக்கை உரையைக் கேட்டு 1,500க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பயனடைந்தனர்.




# பணி நியமன ஆணை வழங்கும் விழாவில் ராம்ராஜ்!

**கோ**வை கண்ணம்பாளையத்தில் உள்ளது கே.ஐ.டி கலைஞர் கருணாநிதி தொழில்நுட்பக் கல்லூரி. இந்தக் கல்லூரியில் இறுதியாண்டு படிக்கும் மாணவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கும் விழா மற்றும் கல்லூரியின் 14–ம் ஆண்டு விழா நடைபெற்றது. ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன் இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். 148 முன்னணி நிறுவனங்களில் பணிபுரியத் தேர்வு செய்யப்பட்டுள்ள 629 மாணவ, மாணவிகளுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி அவர் சிறப்புரையாற்றினார். விழாவில் கல்லூரி நிறுவனத் தலைவர் பொங்கலூர் திரு. நா.பழனிசாமி, டீன் திருமிகு. மகாலட்சுமி, துணை முதல்வர் திரு. ரமேஷ், பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள், பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.





# திருப்பூர் புத்தகத் திருவிழாவில் ராம்ராஜ்!

**தி**ருப்பூர் பின்னல் புக் டிரஸ்ட் மற்றும் பாரதி புத்தகாலயம் இணைந்து நடத்திய 18வது திருப்பூர் புத்தகத் திருவிழா ஏப்ரல் 14 முதல் 24–ம் தேதி வரை நடைபெற்றது. திருவிழாவின் ஒவ்வொரு நாளும் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிறைவு நாளில் 'மக்களைப் பெரிதும் ஈர்ப்பது கதைகளா? கவிதைகளா?' என்ற தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றம் நடைபெற்றது. 'சொல்லின் செல்வர்' திரு. பி.மணிகண்டன் நடுவராக இருந்து நடத்திய இதில் திருமதி. சுசித்ரா, பேராசிரியர் குருஞானாம்பிகா, ராஜபாளையம் திரு. உமாசங்கர், திரு. தாமல் சரவணன் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சியை திருப்பூர் வெற்றித்தமிழர் பேரவையும் திருப்பூர் நகைச்சுவை மன்றமும் இணைந்து நடத்தின. இந்த இரண்டு அமைப்புகளின் தலைவரும், ராம்ராஜ் காட்டன் நிறுவனருமான திரு. கே.ஆர். நாகராஜன் தலைமையுரையாற்றிப் பட்டிமன்றத்தைத் தொடங்கி வைத்தார்.







# தேடி ஜெயித்த ஹீரோக்கள்!

‘இந்தத் துறையில் நான் இப்படி சாதிக்க விரும்புகிறேன்’ என்று தேடலில் இறங்குவார்கள் பலர். பிரச்னைகள் வந்து கால்களில் சங்கிலியாக சுற்றிக்கொள்ளும். தோல்விகள் சுமையாகத் தலையில் ஏறி அழுத்தும். இதைத் தாங்க முடியாமல் சோர்ந்துவிடுவார்கள் பலர். ஆனால், ‘என்னால் முடியும்’ என்று உறுதியாக நின்றால் எதையும் சாதிக்கலாம். அப்படிச் சாதித்த சில முன்மாதிரிகள் இங்கே:




**வுடி ஆலன்:** ஹாலிவுட் படங்களைப் பார்ப்பவர்களுக்கு இவரைத் தெரியாமல் இருக்காது. காலத்தால் அழியாத திரைப்படங்களை இயக்கியவர். நான்கு முறை ஆஸ்கர் விருது வென்ற சாதனைக்குச் சொந்தக்காரர். ஆனால், இளம் வயதில் நியூயார்க் பல்கலைக்கழகத்தில் திரைப்படம் குறித்த பட்டம் படிக்கும்போது தேர்வில் பலமுறை தோல்வி அடைந்தவர். ஒருகட்டத்தில் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டார். படித்து பட்டம் வாங்காவிட்டாலும் தான் நினைத்ததைச் சாதித்தார் அவர்.



**கேப்ரியல் ஜீசஸ்:** பிரேசில் நாட்டின் புகழ்பெற்ற கால்பந்து வீரர். இளம்வயதில் வீதிகளில் கால்பந்து ஆடிப் பழகிய இவருக்கு, நாட்டுக்காகக் கால்பந்து ஆட வேண்டும் என்பது கனவு. 2014–ம் ஆண்டு உலகக்கோப்பை கால்பந்து போட்டி பிரேசிலில் நடந்தபோது, வெற்றுக் கால்களுடன் வீதிகளில் பெயின்ட் அடிக்கும் பணியைச் செய்தவர். கால்பந்து போட்டிகளை யார் வீட்டு டி.வி–யிலோ பார்த்தவர். தொடர் முயற்சியால் தன் திறமையை நிரூபித்து இன்று பிரேசில் அணியில் இடம் பிடித்திருக்கிறார். இன்று ஆண்டுக்கு 38 கோடி ரூபாய் சம்பாதிக்கிறார்.



**ஹோவர்ட் ஷூல்ஸ்:** ஸ்டார்பக்ஸ் நிறுவனம் ஆரம்பத்தில் காபி கொட்டைகளை மட்டுமே விற்பனை செய்துவந்தது. கஸ்டமர்கள் வந்து சொகுசாக அமர்ந்து காபி குடிக்கும்விதமாக காபி ஷாப்களை ஆரம்பிக்க வேண்டும் என்பது ஹோவர்ட் ஷூல்ஸ் கனவு. அப்போது அவர் அந்த நிறுவனத்தில் ஊழியர். அவர் சொன்ன யோசனையை நிர்வாகம் ஏற்கவில்லை. வேலையை ராஜினாமா செய்த ஷூல்ஸ், இரண்டே ஆண்டுகளில் நிறைய சம்பாதித்து அந்த நிறுவனத்தையே வாங்கினார். இன்று அமெரிக்காவில் மட்டுமின்றி, உலகெங்கும் ஸ்டார்பக்ஸ் காபி ஷாப்கள் இருக்கின்றன.



**ஸ்டான் லி ஸ்மித்:** அமெரிக்காவின் புகழ்பெற்ற டென்னிஸ் வீரர். டேவிஸ் கோப்பையை அமெரிக்கா எட்டு முறை வெல்வதற்குக் காரணமாக இருந்தவர். ஆனால், சிறுவயதில் ஆர்வத்துடன் மைதானத்துக்கு வந்தபோது, அவரை உள்ளேயே விடவில்லை நிர்வாகிகள். ‘நேரத்துக்கு வருவதில்லை, விளையாட்டில் கவனம் இல்லை’ என்று சொல்லி ஒதுக்கினார்கள். விளையாட்டுப் போட்டிகளின்போது மைதானத்துக்கு வெளியில் நின்று பந்து பொறுக்கிப் போடுவதற்குக்கூட அவரை அனுமதிக்கவில்லை. ஆனால், தனது தேடல் டென்னிஸ்தான் என்று உறுதியாக இருந்து அவர் சாதித்தார்.



**ஹாரிசன் ஃபோர்டு:** இன்று புகழ்பெற்ற ஹாலிவுட் நடிகராக இவரை உலகத்துக்கே தெரியும். ஆனால், இளம்வயதில் அவர் சந்திக்காத சோதனைகள் இல்லை. ஆரம்பத்தில் சிறு வேடங்களில் நடித்தார். ஆனால், வாய்ப்புகளும் வருமானமும் குறைவு. ஒரு கட்டத்தில் மனைவி மற்றும் குழந்தைகளைக் காப்பதற்காக தச்சுத் தொழிலாளியாக மாறினார். ஆனாலும், சினிமா தேடலை நிறுத்தவில்லை. மீண்டும் வாய்ப்புகளைத் தேடிப் பிடித்து இம்முறை திறமையை நிரூபித்தார். அதன்பின் புகழ் வெளிச்சம் மங்கவில்லை.



**அமான்சியோ ஒர்டேகா:** ஸ்பெயின் நாட்டில் ஒரு சாதாரண ரயில்வே தொழிலாளிக்கு மகனாகப் பிறந்தவர். வறுமையான குடும்பச்சூழல் காரணமாகப் படிக்க முடியவில்லை. சட்டைகள் தைத்துத் தரும் ஒரு சிறிய கடையில் வேலைக்குச் சேர்ந்தார். நாடு முழுக்கத் துணிகளை விற்பனை செய்யும் கடைகளைத் திறக்க வேண்டும் என்று கனவு கண்டார். கடும் உழைப்பால் அவர் தேடல் சாத்தியமானது. இன்று அவரது Zara நிறுவனத்தின் ஷோரூம்கள் உலகம் முழுக்க உள்ளன. ஐரோப்பாவின் மூன்றாவது பெரிய பணக்காரராக அவர் உயர்ந்திருக்கிறார்.



**ரேமண்ட் க்ராக்:** குடும்ப வறுமை காரணமாக இளம் வயதில் பேப்பர் கப், மில்க் ஷேக் என்று பல பொருட்களை வீதிகளில் எடுத்துப் போய் விற்றவர் ரேமண்ட் க்ராக். உலகம் முழுக்கப் பெயர் சொல்லும் வெற்றிகரமான ஒரு நிறுவனத்தை உருவாக்க வேண்டும் என்று கனவு கண்டார். 52 வயதில் மெக்டொனால்ட் நிறுவனத்தை வாங்கினார். அமெரிக்காவில் ஒரு சிறிய கடையாக இருந்த அதனை, இன்று உலகம் முழுக்க ரெஸ்டாரன்ட் நடத்தும் மாபெரும் நிறுவனமாக வளர்த்திருக்கிறார்.



**சோய்சிரோ ஹோண்டா:** ஏழைக் குடும்பத்தில் பிறந்து, சிறு வயதிலேயே தந்தைக்குத் துணையாக வேலை செய்யச் சென்றவர் ஹோண்டா. தட்டுத் தடுமாறிப் படித்தவர், குடும்பத்துக்கு உதவுவதற்காக ஒரு மெக்கானிக் வேலையில் சேர்ந்தார். ஒரு மோட்டார் சைக்கிள் உருவாக்க வேண்டும் என்பது அவர் கனவு. சைக்கிள்களில் பழைய மோட்டார்களைப் பொருத்தி ஓட்டிப் பார்த்து தன் அறிவை வளர்த்துக்கொண்டார். படிப்படியாக முன்னேறி ஹோண்டா நிறுவனத்தை ஆரம்பித்தார். இன்று அந்த நிறுவனத்தைத் தெரியாதவர்கள் உலகில் யாரும் இல்லை. ●


# வெண்மை

**VENMAII**

தமிழ் மாத இதழ்

மலர் 6 இதழ் 12

ஜூன் 2022

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

**கே.ஆர்.நாகராஜன்**

ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

**உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜ் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
email: contacttharu@gmail.com



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137



# தேடல் மொழிகள்

◖ எதை நீ தேடிக் கொண்டிருக்கிறாயோ, அது உன்னைத் தேடிக் கொண்டிருக்கிறது.

◖ நிம்மதியைத் தேடி எங்கெங்கோ பயணம் செய்பவர்கள், கடைசியில் வீடு திரும்பியதும் அங்கே அதைக் கண்டுபிடிப்பார்கள்.

◖ ஒவ்வொரு தோல்வியும் ஓர் அனுபவம்; ஒவ்வொரு இழப்பும் ஒரு லாபம்; ஒவ்வொரு மாற்றமும் ஓர் எச்சரிக்கை; ஒவ்வொரு காணாமல் போதலும் ஒரு தேடல்.

◖ வாழ்க்கைப் பாதையில் தேடல் முடிவு இல்லாதது... வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் மனிதன் ஏதோ ஒன்றைத் தேடுகிறான். அதை அடைந்தபின் மற்றொன்றைத் தேடுகிறான். முடிவற்ற தேடலே நம்மை உயர்த்துகிறது.

◖ ஒரு மடங்கு திறமை, இரு மடங்கு தேடல், மூன்று மடங்கு பொறுமை... இப்படி உங்களை நீங்கள் தயார்படுத்தினால் மட்டுமே உங்கள் இலக்கை அடைய முடியும்.

◖ தேடித் தேடி ஒரு செயலை செய்து முடிக்கும்வரை ‘அது சாத்தியமில்லை’ என்றே பலர் எதிர்மறையாகச் சொல்லிக்கொண்டிருப்பார்கள்.

◖ ஒவ்வொரு நாளிலும் முன்னோக்கி நகர்வதே நிஜமான தேடல்.

◖ நம்பிக்கையுடன் தேடலைத் தொடங்கினால் போதும், அந்த நம்பிக்கையே உங்களைப் பாதி தூரம் கூட்டிப் போய்விடும்.

◖ தோல்விகள் உங்கள் தேடலுக்குத் தடை போடுவதாக இருக்கக்கூடாது. அவை உங்களுக்கு வழிகாட்ட வேண்டும்.

◖ இன்று கடினமான நாளாக இருக்கலாம், நாளை மோசமான நாளாக ஆகலாம். அதற்குப்பின் நம்பிக்கை ஒளி கண்களில் தெரியக்கூடும். எனவே, தேடலைக் கைவிடாதீர்கள்.



வாழ்க்கையில் சில முயற்சிகளைக் கைவிட நேரும். ஆனால், ஒருபோதும் தேடலைக் கைவிடாதீர்கள். அதுதான் உங்கள் வாழ்வுக்கு அர்த்தம் கொடுக்கும்.

உங்களின் இன்றைய நிலைமை எப்படிப்பட்டதாக வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனால், முடிவில் ஒருநாள் நீங்கள் தேடியதை அடைவீர்கள். எவ்வளவு இருளான குகையில் சிக்கினாலும் அதன் முடிவில் வெளிச்சப்பாதை தெரியும்.

திறமைசாலிகள் மட்டுமே தாங்கள் தேடியதை அடைவார்கள் என்று நினைக்காதீர்கள். போராட்டக் குணத்துடன் சளைக்காமல் தேடுபவர்களே, தாங்கள் நினைப்பதை அடைகிறார்கள்.

வாழ்க்கையில் தோற்ற பலரும் முயற்சி செய்யாதவர்கள் இல்லை. தாங்கள் தேடியதை நெருங்கும் நேரத்தில் தேடலைக் கைவிடுபவர்களே தோற்கிறார்கள்.

நீங்கள் எதைத் தேடுகிறீர்களோ, அதற்கான உழைப்பைக் கொடுத்தால் அது உங்களுக்கு நிச்சயம் கிடைத்துவிடும். எனவே, முயற்சியைக் கைவிடாதீர்கள்.

நீங்கள் மெதுவாக செல்கிறீர்களா, வேகமாகப் போகிறீர்களா என்பது முக்கியம் இல்லை. பயணத்தை நிறுத்தாமல் இருந்தாலே போதும். இலக்கை அடைந்துவிடலாம்.

ஒரு தேடலில் தோல்வி என்பது முடக்கிப் போடும் விஷயமல்ல. அது ஒரு வாய்ப்பு, மீண்டும் ஒருமுறை சிறப்பாக முயற்சி செய்து வெற்றி பெறுவதற்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பு.

வாழ்க்கையில் பல தோல்விகளைச் சந்திக்கும் ஒருவர், தோற்கடிக்கப்பட்டவர் என்ற முத்திரை பெறுவதில்லை. அவருக்குள் தேடல் இருந்தால் நிச்சயம் அவர் ஜெயிக்க முடியும்.

உன் சந்தோஷத்தை அடுத்தவரிடம் தேடாதே. அது உனக்குத் தனிமையை மட்டுமே தரும். உன் சந்தோஷத்தை உன்னுள் தேடு. மகிழ்ச்சியாய் இருப்பாய்!

தேடல் உள்ள உயிர்களுக்கே தினமும் பசியெடுக்கும். தேடல் என்பது உள்ளவரை வாழ்வில் ருசியிருக்கும். நாம் எதைத் தேடுகிறோமோ அதுவாகவே உருவாகிறோம்.

வாழ்க்கையில் தேடல் இல்லாவிட்டால் தேங்கிய நீரைப் போலப் பாசி பிடித்துப் பயனற்றுப் போய்விடுவோம். நதியை போல் ஓடிக்கொண்டே இருங்கள். அப்போதுதான் வாழ்க்கையில் வசந்தம் வீசும்.

வாழ்வே தேடலானது. ஹால்ல இருந்தா டி.வி., ரிமோட் தேடனும், ரூம்ல இருந்தா ஏ.சி., ரிமோட் தேடனும், வெளிய கிளம்புனும்னா பைக் சாவி தேடனும். எதைத் தேடறோம்னு உணர்ந்து தேடினா நிம்மதியா வாழலாம்.

தேடல் அல்ல அதன் பெயர், அடுத்த கட்டம். அதை ‘முன்னேற்றம்’ என்றும் கூறலாம். அதைத்தான் நாம் தேடுகிறோம். சரியான பாதையில் கவனம் சிதறாமல் போனால் தேடியதை அடையலாம்.

இந்த வாழ்க்கையே ஒரு தேடல்தான். அதைத் தேடித் தேடி தேடும் மனது தொலைகிறதே!

தேடல் இருந்தால்தான் வாழ்க்கை நகரும். தேடல் இல்லாத வாழ்க்கை, கடலினில் விடப்பட்ட காகிதக் கப்பலைப் போல திசையறியாது மூழ்கிப் போகும்.

தேடல் உள்ளவரை மட்டுமே இந்த வாழ்க்கையின் பல அழகிய தருணங்களை நம்மால் உணர முடியும். அந்தத் தேடல் மாறிக்கொண்டேதான் இருக்கும். தேடல் ஒன்றே நிரந்தரம்.

தேடு, தேடு, உன் எல்லை எதுவென்று தெரியும் வரை ஓடு. வெற்றி உன்னைத் தழுவும் வரை தேடிக்கொண்டே இரு. வெற்றி வெகுதூரமில்லை. விடியும்பொழுது வெற்றியுடன் விடியட்டும்.

ஏதோ ஒன்றை இழப்பதன் மூலம் ஏதோ ஒன்றைப் பெறப்போகிறோம் என்று சமாதானம் அடையும் மனதில் இழப்பை நினைத்து வருத்தம் வருவதில்லை. நம்பிக்கைத் துளிர்விட்டுத் தேடல் தொடர்கிறது.

எது நம் தேடலாகிறதோ, அதிலேயே நாம் கரைந்து போய்விடுகிறோம். தேடலில் கரைந்து தேடலின் பதிலாக நாமே மாறிவிடுவதே நம் வாழ்வில் நாம் அறியாத விஷயம்.

விழிகளின் தேடலில் இல்லை வாழ்க்கை; வலிகளின் தேடலில் உள்ளது வாழ்க்கை.

தேடுவதை நிறுத்தும்போது விரும்பியது கிடைக்கும். ●





# அறிவைத் தேடுங்கள்!

நதிக்கரை ஓரமாகப் பயணம் செய்தான் ஓர் இளைஞன். உச்சி வெயிலில் சோர்ந்துபோய் ஒரு மரத்தடியில் இளைப்பாறினான். அங்கு ஒரு துறவி இருந்தார். இளைஞன் பசியுடன் இருப்பதைப் பார்த்த துறவி, தனது பையிலிருந்து உணவை எடுத்து அவனுடன் பகிர்ந்துகொண்டார். அப்போதுதான் இளைஞன் கவனித்தான், துறவியின் பையில் விலையுயர்ந்த வைரக்கல் ஒன்று இருந்தது. துறவிக்கு இது எதற்கு என்று யோசித்தான். "சுவாமி, நான் பிழைப்பு தேடியே வெளியூர் போகிறேன். அந்தக் கல்லை எனக்குக் கொடுத்தால் நிம்மதியாக வாழ்வேன்" என்றான்.

துறவி தயக்கமே இல்லாமல் அதை எடுத்துக் கொடுத்துவிட்டார். "எனக்கு இது தேவையில்லை. வழியில் கிடந்தது. இருக்கட்டும் என்று பையில் எடுத்து வைத்தேன்" என்றார். அந்த ஒரு வைரக்கல்லை வைத்து அவன் ஊரில் இருக்கும் அத்தனை நிலங்களையும் வாங்கிவிட முடியும். ஊரிலேயே அவன் பெரிய பணக்காரன் ஆகிவிட முடியும். இளைஞன் மகிழ்ச்சியுடன் அவருக்கு நன்றி சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

ஆனால், சில நிமிடங்களிலேயே திரும்பிவந்து அந்தத் துறவியின் கால்களில் விழுந்து வணங்கினான். "இந்த வைரக்கல் எனக்கு வேண்டாம் சுவாமி. நான் கேட்டதுமே எந்தத் தயக்கமும் இல்லாமல் என்னிடம் இதைக் கொடுத்தீர்களே! அந்த மனம் இதைவிட மதிப்பு வாய்ந்தது. அதை அடைவதற்கான வழியை மட்டும் சொல்லிக்கொடுங்கள்" என்றான்.

துறவி சிரித்தார். "நீ திரும்பி வருவாய் என்று நினைத்தேன். நல்லவிதமாக நீ சிந்தித்து இருக்கிறாய். இந்தக் கல்லைவிட உன் மூளை மதிப்பு வாய்ந்தது என்பதைப் புரிந்துகொண்டாய்" என்ற அவர், அறிவைத் தேடும் வழியைச் சொல்லித் தந்தார்.

"நூல்களிலிருந்து கற்பது மட்டுமே அறிவு அல்ல, கற்றதை எல்லாம் வாழ்க்கையில் பயன்படுத்தும்போதே அறிவு முழுமை பெறுகிறது. அது நீண்ட பயணம். அதில் உங்களுக்கு நீங்களே தேர்வுகள் வைத்துக்கொள்ள வேண்டும். வலிகளும் போராட்டமும் நிறைந்ததாக அது இருக்கும்.

வாழ்க்கை எனும் பள்ளிக்கூடத்தில் பொறுமை, இடைவிடாத முயற்சி, களைப்பே இல்லாமல் முன்னேறும் குணம் இருக்க வேண்டும். அச்சம், தோல்வி குறித்த பயம், மற்றவர்களின் கேலிகள், பொறாமைகள் ஆகியவற்றைப் புறக்கணித்து பணிவுடன் இந்தப் பயணத்தைத் தொடர வேண்டும். நேர்மறையான மனநிலையும் தணியாத தாகமும் இருந்தால் மதிப்புமிக்க அறிவைப் பெறலாம். அறிவைச் சம்பாதிப்பதற்கு காலக்கெடு எதுவும் இல்லை. நாம் எவ்வளவு அறிவு பெற்றிருக்கிறோம் என்பதை அளப்பதற்குக் கருவிகளும் இல்லை.

பல போராட்டங்களைச் சந்தித்து, சில தோல்விகளை எதிர்கொண்டு, அதன்பிறகே முழுமையான அறிவைப் பெற முடியும். தவறுகளை எப்படித் தவிர்ப்பது என்று பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சொல்லித் தருவார்கள். ஆனால் வாழ்க்கை நமக்கு தவறுகளைச் செய்து கற்றுக்கொள்வது எப்படி என்பதைப் புரியவைக்கும். அறிவைத் தேடிய பயணத்தில் நிறைய கற்றுக்கொள்ளும்போது தவறுகளும் போராட்டங்களும் குறையும்.

இந்த உலகத்தில் பணத்தால் வாங்க முடிகிற தங்கம், வைரம் போன்றவற்றைவிட அறிவு மகத்தானது. அது இருந்தால், எதையும் அடைய முடிகிற சக்தி கிடைக்கும்." ●



# வெற்றியைத் தேடுங்கள்!

**வாழ்க்கையில் வெற்றி என்பது என்ன? ஒவ்வொருவரும் இதற்கு வெவ்வேறு அளவுகோல் வைத்திருக்கிறார்கள்.**

ஒரு தேர்வு. அதில் எல்லாப் பாடங்களிலும் தட்டுத் தடுமாறி 35 மார்க் வாங்கித் தேர்ச்சி பெறுகிறான் ஒரு மாணவன். அவன் குடும்பமே மகிழ்ச்சி ஆரவாரம் செய்கிறது. தெரு முழுக்க எல்லோருக்கும் இனிப்பு வழங்கித் தன் வெற்றியைக் கொண்டாடுகிறான் அவன். காரணம், அவர்கள் குடும்பத்தில் இதற்கு முன்பு யாருமே இந்த அளவுக்குக்கூடப் படித்திருக்கவில்லை. அதே தெருவில் இன்னொரு மாணவன். 96 சதவிகித மதிப்பெண்கள் வாங்கித் தேர்ச்சி பெறுகிறான். ஆனால், அவன் வீட்டில் எல்லோருமே சோகத்தில் இருந்தார்கள். மாநிலத்தின் முன்னணிக் கல்லூரி ஒன்றில் சேர்ந்து படிக்கும் ஆசையில் அவன் இருந்தான். இன்னும் இரண்டு மார்க் வாங்கியிருந்தால் அது நடந்திருக்கும். அந்த ஆசை பறிபோனதால், இவ்வளவு மார்க் வாங்கியும் அவனுக்கு மகிழ்ச்சி இல்லை. அப்படியானால் எது வெற்றி?

சிவில் சர்வீஸ் தேர்வு எழுதி மூன்று கட்ட தேர்வுகளைத்தாண்டி வெல்பவர்களே பெருமைக்குரிய அதிகாரிகள் ஆக முடியும். ஒட்டுமொத்தமாக அந்தத் தேர்வில் அதிகம் மார்க் வாங்கியவர்கள் ஐ.ஏ.எஸ்., அதிகாரி ஆவார்கள், அதற்கு அடுத்தகட்ட மதிப்பெண் வாங்கியவர்கள் ஐ.எஃப்.எஸ்., மற்றும் ஐ.பி.எஸ்., போன்ற பதவிகளை அடைய முடியும். ரேங்கிங் வரிசையில் இப்படி படிப்படியாக பதவிகள் வழங்கப்படும். 700, 800 ரேங்குகளுக்குக் கீழே வருபவர்களுக்கு அதிக முக்கியத்துவம் இல்லாத சேவைத்துறைகளில் வேலை வழங்கப்படும். 700க்கும் கீழே ரேங்க் எடுத்த பலரும் தங்களுக்குக் கிடைத்த வேலையில் சேர்ந்துவிடுவார்கள். ஆனால், நூறாவது ரேங்கைத் தொட்ட ஒருவர் மீண்டும் அடுத்த ஆண்டு முயற்சி செய்வார். அவருக்கு அதைவிட மேலே இருக்கும் பதவியை அடைவதே வெற்றியாக இருக்கும்.

ஒரு தேர்தலில் அதிக இடங்களில் ஜெயித்த கட்சிக்கு ஆட்சியைப் பிடிப்பதற்கு சிலரின் ஆதரவு வேண்டியிருக்கும். ஆனால், இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்ற கட்சிகள் இணைந்து கூட்டணி அமைத்து ஆட்சியை அமைக்கும். இதுபோன்ற விநோதம் நிறைய நடந்திருக்கிறது. முதலிடம் பிடித்தவர்களுக்கு வெற்றியா? இரண்டாவது, மூன்றாவது இடங்களைப் பிடித்தவர்களுக்கு வெற்றியா?

கிரிக்கெட் விளையாட்டில் இறுதிப்போட்டி வரை சென்று தோற்றுவிட்ட அணி சோகத்தில் இருக்கும். இரண்டாவது இடம் பிடித்ததையே அவர்களால் தாங்கிக்கொள்ள முடியாது. ஆனால், நான்காவது இடத்தில் இருக்கும் ஓர் அணி உற்சாகத்தில் இருக்கும். அரையிறுதிச் சுற்று வரை வந்ததே நமக்குப் பெரிய சாதனை என்று அவர்கள் நம்புவார்கள்.

இந்த உதாரணங்கள் சொல்லும் உண்மை, வெற்றி என்பதை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பார்க்கிறார்கள். நாம் என்ன எதிர்பார்க்கிறோமோ, அது நடந்தால் வெற்றி. நினைத்தது போல நடக்கவில்லை என்றால், அது தோல்வி. எனவே, உங்கள் சாதனைகளை உங்கள் எதிர்பார்ப்புகளால் அளந்து பாருங்கள்.

எளிதாக வெற்றி கிடைத்தால், அதை அதிர்ஷ்டம் என்று சிலர் நினைப்பார்கள். தோல்விகளுக்குப் பிறகு கஷ்டப்பட்டு முயற்சிசெய்து அடையும் வெற்றிக்கு ருசி அதிகம். சிறியதும் பெரியதுமாக பல வெற்றிகளும் தோல்விகளும் கலந்ததே வாழ்க்கை. பழைய தோல்விகளை நினைத்து ஏங்காமல், பழைய வெற்றிகளை அசைபோட்டபடி உற்சாகமாக புதிய வெற்றிகளைத் தேடுங்கள்.





# கனவைத் தேடுங்கள்!

வாழ்வில் ஒவ்வொருவருக்கும் ஒரு மகத்தான கனவு இருக்கும். இன்னும் சில சிறிய கனவுகளும் இருக்கும். கனவுகளை அடைவதற்கான பயணமே ஒருவரை வாழ்நாள் முழுக்கத் துடிப்புடன் இயங்க வைக்கிறது. போராடும் சக்தியைக் கொடுக்கிறது. நாம் நெருங்க நெருங்க அது விலகிப் போவதை உணர முடியும். தொடர்ச்சியான முயற்சி இல்லாதவர்கள் இடையில் ஒதுங்கிவிடுகிறார்கள். அவர்களின் கனவு நிராசையாகவே நீடிக்கிறது. அதன்பின் அவர்களின் வாழ்வு அர்த்தமற்றதாக ஆகிவிடுகிறது.

நம் கனவை நாம் அடைவதைத் தடுக்கும் எதிரிகள் வெளியில் அதிகம் இல்லை. ஒருவருக்குள் ஒளிந்திருக்கும் சோம்பேறித்தனம், சந்தேகம், அச்சம், தயக்கம், முடிவெடுக்க முடியாத தன்மை ஆகியவை அவரின் எதிரிகள். இந்த எதிரிகளை ஒழிக்க முடிந்தால், எந்தக் கனவும் கைக்கெட்டும் தூரத்தில் வந்துவிடும்.

எல்லாக் கனவுகளும் நிறைவேறிவிட்டால் நமக்கு நிம்மதியான வாழ்க்கை கிடைக்கும் என்று நினைப்போம். சரியான கனவைத் தேர்வுசெய்தால் மட்டுமே அது சாத்தியம். இல்லாவிட்டால் விபரீதங்கள் விளையும். இந்தக் கதையில் வரும் பெண் அதற்கு உதாரணம்.

ஒரு கிராமத்தில் ஏழைப்பெண் ஒருத்தி இருந்தாள். பணக்கார வீடுகளில் இருக்கும் பெண்களைப் பார்த்து ஏக்கத்துடனே அவள் வளர்ந்தாள். வசதியான வீடு இல்லை, நல்ல உடைகள் இல்லை, விரும்பிய உணவைச் சாப்பிட முடியாது, சிரித்துப் பேசி உறவாட தோழிகள் இல்லை. எந்த நேரமும் அவள் சோகமாகவே இருப்பாள்.

ஒரு தேவதை இதைக் கவனித்து அவள் முன் வந்து தரிசனம் தந்தது. “உனக்கு ஒரு வரம் தருகிறேன். என்ன வேண்டும் என்று கேள்” என்றது. தேவதையைப் பார்த்ததும் அந்த இளம்பெண் பெரும் பரவசம் அடைந்தாள். தேவதையை வணங்கி நன்றி சொல்லிவிட்டு, என்ன வரம் கேட்கலாம் என்று யோசித்தாள். வீடு, நகைகள், உடைகள், பொழுதுபோக்கு வசதிகள் என்று எதை நினைத்தாலும் எல்லாமே முக்கியமானதாகத் தெரிந்தன. நீண்ட நேரம் யோசித்தும் அவளால் எந்த முடிவையும் எடுக்க முடியவில்லை.

பெண்ணின் நிலைமை அந்த தேவதைக்குப் புரிந்தது. எனவே அது, “கவலைப்பட வேண்டாம். உனக்கு வித்தியாசமான ஒரு வரம் தருகிறேன். அதன்படி ஒவ்வொரு நாளும் நீ நினைக்கும் விருப்பம் ஒன்று நிறைவேறும். தினமும் தூங்கி எழுந்ததும் நீ எதை நினைக்கிறாயோ, அது நடக்கும்” என்று வரம் தந்துவிட்டு மறைந்தது.

அந்தப் பெண் மிகுந்த மகிழ்ச்சியுடன் அடுத்த

நாள் காலை விடியலுக்காகக் காத்திருந்தாள். தூங்கி எழுந்ததும், 'பக்கத்து நகரத்தில் ஒரு மாளிகை வேண்டும்' என்று கேட்டாள். இப்படியே ஒவ்வொரு நாளும் வசதிகள் குவிய, ஆடம்பர மாளிகையில் சகல வசதிகளுடன் உறவுகள் புடைசூழ அவள் வசித்தாள். தினம் தினம் புதுப்புது வசதிகள் அவளிடம் சேர்ந்துகொண்டே இருந்தன. ஆரம்பத்தில் இதெல்லாம் அவளுக்கு பரவசமும் மகிழ்ச்சியும் தந்தன.

நாட்கள் செல்லச் செல்ல அவள் பல பிரச்னைகளை சந்தித்தாள். பணியாளர்கள் எது எதையோ திருடிக்கொண்டு போனார்கள். உறவினர்கள் அவளைப் பற்றி ஏதேதோ கட்டுக்கதைகள் பேசினார்கள். புதிதாக வந்த தோழிகளோ அவளிடம் நிறைய பொருட்களை எதிர்பார்த்தார்கள். செல்வாக்கான மனிதர்கள் சிலர் வந்து, 'நாளைக்கு எனக்காக இந்த வரம் கேள்' என்று மிரட்டலாகக் கட்டளை போட்டார்கள். இப்படி புதிது புதிதாகப் பிரச்னைகளை எதிர்கொண்ட அவளுக்கு, சுத்தமாக நிம்மதி பறிபோனது. ஒவ்வொரு நாளும் விடியும்போது அவளுக்கு மகிழ்ச்சிக்குப் பதிலாக நடுக்கமே ஏற்பட்டது.

கடைசியாக ஒருநாள் தேவதையை வேண்டி அழைத்தாள். "எனக்கு ஒரே ஒரு வரம் மட்டும் கொடு. இதற்குமுன் நான் எப்படி வாழ்ந்தேனோ, அந்த நிம்மதியான வாழ்க்கை வேண்டும். என் கனவுகள் எல்லாம் கனவுகளாகவே இருந்துவிட்டுப் போகட்டும்" என்றாள். "அப்படியே ஆகட்டும்" என்றது தேவதை.

சரியான கனவுகளைத் தேடவில்லை என்றால், பிரச்னைகளே மிஞ்சும். அதேபோல மற்றவர்களுடன் முரண்படாத கனவுகளாக அவை இருக்க வேண்டும். அப்படி இல்லாததால் ஒரு மன்னன் பல பிரச்னைகளைச் சந்தித்தான்.

ஒரு மன்னனின் கனவிலும் தேவதை வந்தது. ''நீ கேட்கும் ஒரு வரத்தை நான் கொடுப்பேன். நாளைக்குள் முடிவு செய்துவிட்டுக் கண்களை மூடிக்கொண்டு கேட்டால், அது நடக்கும்" என்றது.


காலையில் விழித்ததும் தன் அமைச்சர்களைக் கூப்பிட்டு ஆலோசனை செய்தான் மன்னன். ஆளாளுக்கு ஒரு யோசனை சொன்னார்கள். முதன்மை அமைச்சர், "எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது மன்னா! நம் நாட்டின் குடிமக்கள் எல்லோரும் நினைப்பது நடக்க வேண்டும் என்று வரம் கேளுங்கள். எல்லோருக்குமே கேட்டது கிடைக்கும். ஒட்டுமொத்த நாடுமே வளமாகிவிடும். இந்த உலகத்திலேயே 'நினைப்பது எல்லாம் நடக்கும் ஒரே நாடு' என்ற பெருமை நமக்குக் கிடைக்கும்" என்றார்.

புதிதாகப் பணியில் சேர்ந்த அமைச்சர் ஒருவர், "அப்படி வரம் கேட்க வேண்டாம் மன்னா! அது விபரீதத்தில் முடியும்" என்று தடுத்தார். ஆனால் மற்ற அமைச்சர்கள், "நீ புதியவன், உனக்கு என்ன தெரியும்?" என்று அவரைத் திட்டினார்கள். மன்னனும் அதற்குள் கண்களை மூடிக்கொண்டு வரம் கேட்டுவிட்டான்.

அதன்பின் நாடு முழுக்க பல மாற்றங்கள் நடந்தன. திடீரென சில குடிசைகள் மாளிகைகளாக மாறின. பலரின் உடலெங்கும் தங்க நகைகள் மின்னின. முதியவர்கள் இளைஞர்களாக மாறினார்கள். நோயாளிகள் நலம்பெற்று நடமாடினர்கள். வறண்ட பூமிகள் வளமாகி அதில் பயிர்கள் வளர்ந்தன. சிலர் சிறகுகள் முளைத்து பறக்கத் தொடங்கினார்கள். எல்லோருக்குமே 'நாம் நினைத்ததெல்லாம் நடக்கிறது' என்பது ஒரே நாளில் புரியத் தொடங்கிவிட்டது.

அதைத் தொடர்ந்து விபரீதங்கள் அரங்கேறின. பொறமைக்குணம் கொண்டவர்கள், 'என் எதிரியின் வீடு இடிய வேண்டும்' என்று நினைத்தார்கள். பல மாளிகைகள் நொறுங்கின. சிலர் திடீரென வீதிக்கு வந்து பிச்சைக்காரர்களாக மாறினார்கள். பலர் இனம்புரியாத நோயில் விழுந்தார்கள். இப்படிப் பகையும் பொறாமையும் எங்கும் சூழ்ந்தது. மன்னனிடம் இப்படி ஒரு வரம் கேட்கச் சொன்ன முதன்மை அமைச்சர், மன்னனைத் துரத்திவிட்டு தான் ராஜாவாக வரம் கேட்டார். அது நடந்தது. பழைய மன்னன் உயிர் பிழைத்தால் போதும் என அரண்மனையிலிருந்து ஓடினான். 'வரம் கேட்க வேண்டாம்' என்று முன்பு மன்னனைத் தடுத்த புது அமைச்சர் இப்போது வந்து மன்னனைக் காப்பாற்றினார். "மன்னா! 'யார் நினைப்பதும் நடக்கக்கூடாது. எல்லாம் பழைய நிலைக்கு மாற வேண்டும்' என கண்களை மூடி வரம் கேளுங்கள். அந்த தேவதைக்கு நிலைமை தெரியும். அது உங்கள் வேண்டுதலை நிறைவேற்றும்'' என்றார். அதன்படியே நடந்தது.

யாருடைய வாழ்விலும் முரண்படாத, அடுத்தவர்களுக்குத் துன்பம் தராத கனவுகளே அழகானவை, நிறைவேற்றத் தகுந்தவை.



## உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**

**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

- மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

**வெண்மை**
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.
**போன்:**
**0421-4304106, 98422 74137**

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiar.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code -ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**


## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை



(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)

| ஒரு வருட சந்தா: | 2 வருட சந்தா: |
|---|---|
| ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | ரூ.~~380~~ ரூ.250 மட்டும். |

## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை



(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)

| ஒரு வருட சந்தா: | 2 வருட சந்தா: |
|---|---|
| ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | ரூ.~~380~~ ரூ.250 மட்டும். |

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு
**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**



Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 &
Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL



Inners for Winners
RAMRAJ ©
BANIANS • BRIEFS • TRUNKS
சாதிக்கத்
நினைப்பவரின்
சரியான தேர்வு.
தரமான, மிருதுவான,
சுகம் தரும் ராம்ராஜ் பனியன்கள்
மற்றும் உள்ளாடைகள்
உங்களின் கட்டுடலுக்கான
சரியான தேர்வு.
SUKRA®
Super Fine Banians
ROMEX®
Supreme Banians
RISE-UP®
Premium Banians
ARCHERY®
Gym Vest
COMPACT®
Flexible Rib Vest
ACOSTE®
BANIANS | BRIEF | TRUNKS

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2022-24. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-06-2022. Posted at Tirupur BPC on 5th of every month.

